விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 160 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 14 புதன்கிழமை (28.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## கடுமையான எதிர்ப்பையடுத்து
# வடக்கில் காணி அபகரிப்பு
# வர்த்தமானி வாபஸ்

(கொழும்பு)

கடுமையான எதிர்ப்பையடுத்து வடக்கு மக்களின் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணி அபகரிப்புத் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானியை அநுர அரசாங்கம் திரும்பப் பெற்றுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில்
## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

(மன்னார்)

மன்னார் - பெரியபண்டி விரிச்சான் பகுதியில் காணாமல்போன குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## பனை அபிவிருத்தி தலைவர் திடீர் நீக்கம்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் விநாயகமூர்த்தி சகாதேவன் அந்தப் பதவியில் இருந்து திடீரென நீக்கப்பட்

15ஆம் பக்கம் பார்க்க

### ஏனைய வேட்பாளர் தெரிவைப் பார்த்தால்
## வடக்கு முதலமைச்சராக தும்புத்தடியை நிறுத்தலாம்
### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)


ஏனைய கட்சிகளின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர்களின் தெரிவைக் கருத்தில் கொண்டால் நாங்கள் ஒரு தும்புத்தடியை நிறுத்தலாம் என நினைக்கிறோம் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராக அரசுக்கு அழுத்தம் வழங்குக
### ஆஸி உயர்ஸ்தானிகரிடம் சிறீதரன் எம்.பி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராக அரசுக்கு அழுத்தம் வழங்குங்கள் என அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்ரீபன்ஸிடம் சிறீதரன் எம்.பி கோரிக்கை முன்வைத்துள்ளார்.



15ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களை தவறாக வழிநடத்த முயற்சி
### காணி அமைச்சர் கே.டி.லால்காந்த

(கொழும்பு)

தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களை தவறாக வழிநடத்த முயற்சி செய்கின்றனர் என காணி அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

வடக்கு காணி விவகாரம் தொடர்பில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.



15ஆம் பக்கம் பார்க்க

## பித்தப்பை அகற்றப்பட்டதால் யாழில் இளம் பெண் மரணம்
### உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

பித்தப்பை அகற்றப்பட்டதால் மயக்கமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம், நல்லூர் மூத்தவிநாயகர் கோயில் வீதியைச் சேர்ந்த துஷ்யந்தன்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் ஐஸ் போதையுடன் கைதான 26 வயதுப் பெண்ணை
### புனர்வாழ்வுக்கு அனுப்ப நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் கைதான 26 வயதுடைய பெண்ணை புனர்வாழ்வுக்கு உட்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த பெண் நேற்று முன்தினம் 340 மில்லிகிராம் ஐஸ் போதையுடன் சுன்னாகப் பகுதியில் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் போதைப்பொருள் பாவனைக்கு

15ஆம் பக்கம் பார்க்க

### யாழில் அமையவுள்ள
## கடவுச்சீட்டு அலுவலகத்தை பார்வையிட்ட அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் விரைவில் அமையவுள்ள கடவுச்சீட்டு அலுவல

02ஆம் பக்கம் பார்க்க

### நிகழ்நிலை காப்புச் சட்டம்
## திருத்தம் தொடர்பில் ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பது காலத்தின் தேவையாகும். அதில் ஏற்கனவே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும், இந்தச் சட்டத்தில் மேலும் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் விசேட குழுவொன்றை நிய

16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி சுவீகரிப்பு வர்த்தமானியை
# அரசு மீளப்பெற்றமை வடக்கு மக்களுக்கு கிடைத்த வெற்றி
## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



(யாழ்ப்பாணம்)

காணி சுவிகரிப்பு வர்த்தமானியை அரசாங்கம் மீளப் பெற்றமை வடக்கு மாகாண மக்களுக்கு கிடைத்த வெற்றி இதற்காகப் பாடுபட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் இணைந்து செயற்பட்டதன் விளைவாகவே இந்த நிலை ஏற்பட்டது எனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் இருக்கக் கூடிய மக்களுக்கு மிக மோசமான பின்னடைவை ஏற்படக்கூடிய ஆபத்திலிருந்து இந்த வர்த்தமானி வாபஸ் பெற வைத்தது பெரும் வெற்றி என்றே சொல்லவேண்டும்.

அந்த வகையில் பாராளுமன்றத்தில் இதனைக் கொண்டுவந்து பாரிய அழுத்தத்தை எற்படுத்துவதற்கு பலர் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அதில் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு பிரேணை கொண்டுவந்தபோது அதனை வழிமொழிந்து ஆதரித்த இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுக்களின் தலைவர் சிவஞானம் சிறீதரனுக்கு நன்றியைத் தெரிவிப்பதுடன் ஏனைய தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா இராமநாதனுக்கும் நன்றியைக் கூறுவதுடன், நாங்கள் தமிழ்த்தேசிய பேரவையாகக் கொழும்பில் இருக்கக் கூடிய வெளிநாட்டு தூதரங்களுக்குச் சென்று இந்த விடயம் தொடர்பில் வர்தமானியை வாபஸ் பெறவைக்க வேண்டும் என்று கூறியிருந்தோம். அவர்களும் எமக்கு வாக்குறுதியளித்திருந்தார்கள். நாங்கள் இவற்றைக் கலந்துரையாடுவோம் என்று அவர்களும் இதனைச் செய்திருக்காவிட்டால், இவற்றைச் செய்திருக்க முடியாது. எனவே இவர்களுக்கும் எமது நன்றிகள். இந்த அரசாங்கம் எங்கள் கருத்துகளைக் கேட்டு இவற்றைச் செய்யும் என்றால் இனப்பிரச்சினையே இருக்காது.

பாராளுமன்றத்தில் இவற்றை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து இந்த அழுத்தங்களை வழங்காது விட்டால், இதனைச் செய்திருக்க முடியாது. மேலும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி நிசாம் காரியப்பர் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ரவுப் ஹக்கிம் அவர்களுக்கும் விசேட நன்றிகள். பிரதமருடன் சந்திப்பில் இவர்கள் இருவரும் தமது நிலைப்பாட்டை வலியுறுத்தியிருந்தனர்.

இதில் முக்கியமாக இந்த வர்த்தமானி வாபஸ் பெறப்பட்டமையானது தமிழ்பேசும் மக்களாக நாங்கள் இணைந்து விவாதித்தது கூட்டு முயற்சியாக வெற்றியளித்தது. இதனைத் தமிழ் முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.


இன்றைய ஆட்சியாளர்கள் தமிழ் முஸ்லிம் மக்கள் எமக்கு வாக்களித்தார்கள் என்று கூறுவது மட்டுமல்லாது, பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெருன்பான்மைக்கு அதிகமாக அவர்கள் இருக்கும் நிலையில் தமிழ் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து செயற்பட்டதன் வெற்றியாகும்.

சிங்கள மக்கள் குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்கு நாம் கெடுதல் செய்யவில்லை என்பதைச் சிங்கள மக்கள் உணர வேண்டும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சிங்கள மக்களுக்கு எதிராக நடக்க வேண்டும் என்பது எமது அடிப்படை கோட்பாடு அல்ல. முஸ்லிம் மக்களையும் நாம் இணைத்துச் செயற்படுவதன் மூலம் நாம் அசைக்க முடியாத பலத்தை, வெற்றியை அடையலாம்.

இந்த சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஐங்கரநேசன் மற்றும் அருந்தவபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-4,7)

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில்

# காலமான பிரபாகரனுக்கு இன்று இதய அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

விபத்தில் மரணமடைந்த இந்தியத் துணைத் தூதரக அதிகாரி சச்சிதானந்த குருக்கள் பிரபாகரன் அவர்களின் அஞ்சலி நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் 9.30 மணிவரை இந்தியத் துணைத் தூதரகம் ஏற்பாட்டில் குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ம-4,7)

# வடக்கு காணி அபகரிப்பு வர்த்தமானி வாபஸ்
## ஜனாதிபதிக்கு சுமந்திரன் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காணி நிர்ணயச்சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 28.03.2025 ஆம் திகதி வர்த்தமானியை இரத்துச் செய்தமைக்காக ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் எனத் தெரிவித்து, இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம். ஏ.சுமந்திரன் கடிதமொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மேற்படி வர்த்தமானி அறிவிப்பில் அடையாளம் காணப்பட்ட பெரும்பாலான நிலங்கள் அமைந்துள்ள வடமராட்சி கிழக்கு முல்லைத்தீவில் மூன்று சட்ட ஆலோசனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

முன்னர் அனுப்பிய கடிதங்களில் குறிப்பிடப்பட்டதற்கு மேலதிகமாக சுனாமிக்கு பின்னர் அரசாங்க பொறிமுறைகள் மூலம் பணம் கொடுக்கப்பட்டு, பல்வேறு திட்டங்கள் ஊடாக பலருக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றிற்கான உறுதிகள் எவையும் பலருக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்கள் இந்தக் காணிகளில், வீடுகளில் 10 வருடங்களிற்கு மேலாக வாழ்ந்து வருகின்றார்கள். இந்நேரத்தில் இந்தச் சட்டத்தை பிரயோகிப்பது இன்னமும் குழப்பகரமான சூழலை உருவாக்கும்.

இந்தப் பகுதிகளில் காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் விதிகளை குறிப்பாக இந்தக் காலகட்டத்தில் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமற்றது என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகின்றோம். இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச்செல்வது, தாங்கள் எந்தத் தவறும் இழைக்காத நிலையிலும் தங்கள் நிலங்களுக்கு முறையான உரிமை கோரும் நிலையிலும் இல்லாத பலருக்கு பாரிய சிரமங்களை இது ஏற்படுத்தும்.

இந்தச் செயற்பாடு தமிழ் மக்களிடையே பாரிய சமூக அமைதியின்மையை உருவாக்கும் என்பதுடன் போருக்கு பின்னரான சூழலில் நல்லிணக்கத்தைப் பாதிப்பதாக அமையும். அத்தோடு ஏராளமான தனியார் நிலங்கள் இன்னமும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்பதுடன் தேர்தல் வாக்குறுதியில் நீங்கள் விடுவிப்பதாகக் கூறியும் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

எனவே, மேலும் தாமதிக்காமல் மேற்படி வர்த்தமானி அறிவிப்பை இரத்துச் செய்யுமாறு மீண்டுமாக நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம். இல்லையெனில் இது நமது மக்களை வெகுஜன பகிஷ்கரிப்புகளிலும் சட்ட மறுப்பு போராட்டங்களிலும் நாம் வழிநடத்தவேண்டிய நிலையேற்படும்.

நல்லிணக்கம் சம்பந்தமாக உங்கள் அரசாங்கம் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நினைவில் இருத்தி இவ்வர்த்தமானி பிரசுரத்தை உடனடியாக மீளக் கைவாங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-4,7)

## கடவுச் சீட்டு...

கத்தை கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் நேற்று (27) மாலை 05.00 மணிக்கு அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபன் சகிதம் பார்வையிட்டார்.

இதன் போது இதுவரை நடைபெற்ற வேலைகளின் முன்னேற்றத்தினை அரசாங்க அதிபரிடம் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

மேலும், கடவுச்சீட்டு பெறவரும் பொதுமக்கள் அமர்ந்திருக்கும் இடத்தில் அமைக்கப்படவுள்ள கொட்டகை மற்றும் கடவுச்சீட்டு அலுவலகத்தில் கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி விபரங்களை அமைச்சரின் கவனத்திற்கு அரசாங்க அதிபர் கொண்டுவந்தார். (ம-4,7)



# லக்னோவை வீழ்த்தி பெங்களூர் வெற்றி

லக்னோக்கு எதிரான போட்டியில் பெங்களூர் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி ரிஷாட் பன்ட் இன் அதிரடியான சதத்துடன் இருபது ஓவர்கள் முடிவில் 227 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ரிஷாட் பன்ட் 61 பந்துகளில் 8 சிக்சர்கள் உட்பட 118 ஓட்டங்களைக் குவித்தார்.

228 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப் பெடுத்தாடி 18.4 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஜித்தேஷ் 33 பந்துகளில் 85 ஓட்டங்கள் குவித்து இறுதிவரை ஆட்டம் இழக்காமல் இருந்ததோடு போட்டியின் ஆட்டநாயகன் விருதையும் பெற்றுக்கொண்டார். (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பெருந்திருவிழா

# யாழ். மாநகர சபையினருக்கு பட்டோலை வழங்கும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஜூலை 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், நல்லூர் கந்தன் பெருவிழாவிற்கான ஆலயச் சூழல் பராமரிப்பு, ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தல், வீதித் தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகர சபையினருக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி நேற்று பெருவிழா பட்டோலை அடங்கிய காளாஞ்சி ஆலய கணக்குப் பிள்ளையால் கையளிக்கப்பட்டது.



இந்த வைபவத்தின் போது பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகர சபை வளாகத்தில் வாழை, தோரணங்கள் கட்டி அலங்காரங்கள் அமையப் பெற்றிருந்தது. (நி-8-33)

# 3 இலங்கையர்கள் அல்பேனியாவில் கைது

(அல்பேனியா)

போலி ஆவணங்களுடன் காஃபே-தானே எல்லைக் கடவையைக் கடக்க முயன்ற மூன்று இலங்கையர்களை அல்பேனிய எல்லைப் பொலிஸ் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் இத்தாலியை தங்கள் பயண இலக்காகக் கொண்டிருந்ததாக கைது தொடர்பில் அல்பேனிய பொலிஸார் வெளியிட்டிருந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேநேரத்தில், கைதான நபர்களிடம் காணப்பட்ட போலியான ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைதான நபர்கள் 57, 21 மற்றும் 36 வயதுடைய நபர்கள் ஆவர்.

சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக, உளவுத்துறை வழங்கிய தகவலின் அடிப்படையில், எல்லைக் காவல் சேவைகளின் பணியின் தொடர்ச்சியாக, காஃபே தானே எல்லை கடக்கும் இடத்தில் இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

# வீதி விபத்துக்களில் இதுவரை 1,062 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

**இந்த ஆண்டு பதிவான வீதி விபத்துக்களில் மொத்தம் 1,062 பேர் உயிரிழந்துள்ளனர்.**

2025 முதல் மே 25 ஆம் திகதி நிலவரப்படி பதிவான 1,062 வீதி விபத்துக்களின் மூலமாக இந்த இறப்பு எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

அதேநேரம், 2025 ஆம் ஆண்டில் இதுவரை பதிவான 2,064 வீதி விபத்துகளில் சுமாமர் 7,000 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.எஸ்.பி புத்திக மனதுங்க குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில், கடந்த 24 மணி நேரத்தில், நாட்டின் பல பகுதிகளில் இருந்து பதிவான வீதி விபத்துகளில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



# போலந்து அமைச்சர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

போலந்து குடியரசின் வெளியுறவு அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி இலங்கைக்கு இன்று அதிகாரப்பூர்வ விஜய மொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, போலந்து வெளியுறவு அமைச்சர், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரை மரியாதை நிமித்தமாக சந்திக்கவுள்ளார்.

அத்துடன், இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் வெளியுறவு, வெளி நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத்துடன், அவர் கலந்துரையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)

# அரச சேவைக்கான ஆட்சேர்ப்பிற்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

மீளாய்வு செய்த இந்தக் குழு இரண்டு அறிக்கைகளை பிரதமரிடம் கையளித்திருந்தது.

அந்த அறிக்கைகள் ஊடாக 18 நிரல் அமைச்சுக்கள், 04 மாகாண சபைகள் மற்றும் 02 விசேட செலவு அலகுகளில் நிலவும் 15,073 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விதந்துரை செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த அறிக்கை மூலம் விதந்துரை செய்யப்பட்ட ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)







வடக்கு மாகாண முன்னாள் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் அவர்களின் மணிவிழாவும் சேவைநலன் பாராட்டு விழாவும் புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் கா.குகபாலன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன், வேலணை பிரதேச செயலர், பளை பிரதேச செயலர் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## 100ஆவது பட்டம் வென்று ஜோகோவிச் சாதனை



டென்னிஸ் அரங்கில் முதல் நிலை டென்னிஸ் வீரரான நோவாக் ஜோகோவிச் தனது நீண்ட நாள் கனவினை நிறைவேற்றியிருந்தார். 9 மாதங்களுக்கு முன்னர் தனது டென்னிஸ் வாழ்க்கையில் 99 ஆவது பட்டத்தை பதிவு செய்திருந்த ஜோகோவிச் இன்னும் ஒரு தொடரை வெற்றி கொண்டால் 100ஆவது வெற்றி என்ற ரீதியில் அந்த ஒரு வெற்றிக்காக கடந்த 9 மாதங்களாகக் கடுமையாக போராடியிருந்தார்.

இந்நிலையில் தற்போது நடைபெற்று முடிந்த ஜெனிவா பகிரங்க தொடரில் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றிருந்த நிலையில் போலாந்து வீரர் ஹபேர்ட் ஹர்க்களை எதிர் கொண்டு 5-7, 7-6, 7-6 என கைப்பற்றி வெற்றிபெற்று தனது 100வது ATP பட்டத்தை கைப்பற்றி அசத்தினார். (நி-3)

## சச்சினின் 15 வருட சாதனையை முறியடித்த சூர்யகுமார் யாதவ்



ஐ.பி.எல் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மும்பை - பஞ்சாப் அணிகள் விளையாடின. இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவரில் 184 ஓட்டங்கள் குவித்தது. அதிக பட்சமாக சூர்யகுமார் 57 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் நடப்பு தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக சூர்யகுமார் யாதவ் 619 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதன் மூலம் 15 வருட சச்சினின் சாதனையை சூர்யகுமார் முறியடித்துள்ளார். 2010ஆம் ஆண்டு சச்சின் 618 ஓட்டங்கள் எடுத்ததே ஒரு சீசனில் மும்பைக்காக எடுத்த அதிகபட்ச ஓட்டங்களாக இருந்தது. (நி-3)



பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் யா/ உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலயம் 16 வயது பிரிவினருக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் 3 ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவ் வலைப்பந்தாட்ட அணி கடந்த வருடம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சமூக வலைத்தளப் பக்கம் ஆர்.சி.பி சாதனை



10 அணிகளுக்கிடையிலான 18 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. நேற்றுடன் லீக் போட்டிகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில் நடப்பு ஐ.பி.எல் தொடரில் குஜராத், பெங்களூரு, பஞ்சாப், மும்பை ஆகிய அணிகள் பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஐ.பி.எல் தொடரில் விளையாடி வரும் அனைத்து அணிகளும் தங்களது சமூக வலைத்தளப் பக்கங்களில் புகைப்படங்கள், வீடியோக்களைப் பதிவிட்டு வருகின்றன.

இதன்காரணமாக அணிகளின் சமூக வலைத்தளப் பக்கங்களை ரசிகர்கள் ஏராளமானோர் பின் தொடர்ந்து வருகின்றனர். அந்த வகையில், சமூக வலைத்தளங்களில் ஒன்றான இன்ஸ்டாகிராம் பக்கத்தில் 20 மில்லியன் பின் தொடர்பவர்களை பெற்ற முதல் அணி என்ற சாதனையை பெங்களூர் அணி படைத்துள்ளது.

அந்த அணிக்கு அடுத்தபடியாக 18.6 மில்லியன் பின் தொடர்பவர்களுடன் சென்னை அணி 2ஆவது இடத்திலும், 18 மில்லியன் பின் தொடர்பவர்களுடன் மும்பை இந்தியன்ஸ் அணி 3ஆவது இடத்திலும் உள்ளது. (நி-3)

## ஹம்பர்க் ஓபன் டென்னிஸ் பிளாவியோ சம்பியன்



ஜேர்மனியில் ஹம்பர்க் ஓபன் ஆண்கள் டென்னிஸ் போட்டி நடைபெற்றது.

இதன் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் ரஷ்யாவின் ஆண்ட்ரே ரூப்லெவ், இத்தாலியின் பிளாவியோ கோபோலி உடன் மோதினார்.

இதில் சிறப்பாக ஆடிய கோபோலி ஆண்ட்ரேவை 6-2, 6-4 என எளிதில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். (நி-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் புதிய கட்டடத்தொகுதி திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சமாச வளாகம், இல. 95, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணத்தில் தலைவர் ப.கேசவதாசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருமாகிய ந. திருலிங்கநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி. சந்திரசேகரனும், கௌர விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் சமாச முன்னாள் தலைவர், செ. செல்வராசா, மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் .இ விஜய மோகனராஜா, யாழ்ப்பாண சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. செல்வகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-3)

## அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த ஏ.சுலஜனா மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ் பத்திரம் கண் டெடுக்கப்பட்டு வலம்புரிப் பத்திரிகை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை அலுவலக நேரத்தில் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (நி-8-3)

## வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி விழா

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி விழா (2024) நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யா/வேலணை மத்திய கல்லூரி துரைசாமி மண்டபத்தில் வேலணை பிரதேச சபையின் செயலாளர் தி. தியாகசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் இ.குருபரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் க.கம்சநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-3)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. செல்வமணி இரத்தினம்

(திதி–துதியை)28.05.2025

அமரர் "கலாபூஷணம் சோக சோபித சொர்ணக்கவிக்குயில்" V.K.இரத்தினம் அவர்களின் அன்புத் துணைவியார் திருமதி.செல்வமணி இரத்தினம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி


"காலப் பெருவழியில் உங்கள் நினைவுகள்
கனத்துக் கிடக்கின்றது!
ஆண்டுகள் கடந்துவிட்டது
ஆனாலும் நீங்கள் இருவரும் மீண்டு
வரமாட்டீரோ என்று அடிமனம் தவிக்கிறது.

(4395)

கலைமகள் வீதி,
அரியாலை.

பாசத்துடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரி, உறவினர்கள்.

## 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி



அன்னை மடியில்
1977.01.25

ஆண்டவன் அடியில்
2024.06.08

திதி–துதியை

சண்முகராசா ஜசிந்தாஸ்

கனவிலும் நினைவிலும் உம் நினைவலையால்
கதறுது எம் மனம் அறிவீரோ?
முட்டித் ததும்புது கண்களில் கண்ணீர்
முடியவில்லை முன்போல் மீண்டும் வாழ
காலவனவன் கவர்ந்து சென்று ஓராண்டும் ஆனாலும் –எம்
கண்மடல் ஈரம் இன்னும் காயவில்லை ஐயா
காத்திருக்கின்றோம் கண்ணீருடன்–உம்
காலடி ஓசைக்காய்

(C-3059)

உச்சில் வீதி,
கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

077 966 8770

தகவல்:
குடும்பத்தினர்

# இராசிபலன்

28.05.2025
வைகாசி 14, புதன்கிழமை
பிரதமை காலை 7.06 மணிவரை
துதியை பின்னிரவு 5.11 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 3.35 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22மணிவரை

சந்திராஷ்டமம்-
விசாகம்
அக்கினி நாள் முடிவு.

வள்ளுவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பகையொன்று நட்பாகலாம், சவால்களை சமார்த்தியமாக சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், ஊர் மாற்றம், இட மாற்றம் என்பன இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானத்தை அதிகரிக்கப் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**தனுசு** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, களஸ்திர நன்மையுண்டு.

**மகரம்** வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வெற்றி தரும் செய்திகள் வீடு வந்து சேரலாம்.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள் மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

இளமையில் சூதாடுபவர்கள் முதுமையில் பிச்சையெடுப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்முனைவோரை வலுப்படுத்தி, செயற்றிறனை ஊக்குவிக்கும் வகையில்

# புதிய பியாஜியோ Ape முச்சக்கரவண்டி மாதிரிகளை SINGER அறிமுகப்படுத்துகிறது




நாட்டின் மிகவும் நம்பகமான பெயர்களில் ஒன்றான SINGER ஸ்ரீ லங்கா பிஎல்சி, சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற ஒரு பிரமாண்டமான அறிமுக நிகழ்வில், பியாஜியோ Ape முச்சக்கரவண்டிகளின் புதிய மாதிரிகளை பெருமையுடன் அறிமுகப்படுத்தியது.

உலகளவில் புகழ்பெற்ற பியாஜியோ நாமம், உள்நாட்டு வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல், பொருளாதார நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் மற்றும் இலங்கையின் மிகவும் சிறிய மற்றும் சவாலான பாதைகளிலும் செல்லக்கூடிய பல்துறைத் தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட தொலைநோக்குப் பார்வையுடன் இலங்கை சந்தையில் முழு அளவிலான மீள்வருகையை இந்த மைல்கல் நிகழ்வு குறித்தது.

SINGER நாடு தழுவிய பரவலான அணுகல் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையின் ஆதரவுடன், புதிய பியாஜியோ முச்சக்கரவண்டி மாதிரிகளை இலங்கையர்களுக்கு புதியதோர் போக்குவரத்து தீர்வாக கொண்டு வந்துள்ளது. இது பயணிகள் போக்குவரத்து, பொருட்கள் விநியோகம் மற்றும் நாடு முழுவதும் உள்ள சிறிய அளவிலான நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட நம்பகமான, எரிபொருள் திறன் கொண்ட வாகனங்களை வழங்குவது விசேடம்சமாகும்.

அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த SINGER ஸ்ரீ லங்காவின் நிர்வாக இயக்குநர் மகேஷ் விஜேவர்தன, "பியாஜியோ Ape முச்சக்கர வண்டிகளின் அறிமுகம் இலங்கையர்களின் போக்குவரத்து, வருமான திறன் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு மிகச்சிறந்ததோர் பக்கபலமாகும். இந்த முச்சக்கர வண்டிகள் முன்னேற்றத்திற்கான கருவிகளாகும். இது ஆயிரக் கணக்கான இலங்கையர்கள் ஒவ்வொரு பிரிவிலும், பகுதிகளில் கூட வருவாய் பெற்றிட, வளர மற்றும் செழிக்க உதவுகிறது."

இலங்கையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த ஒரு பாரம்பரியத்துடனும், ஏற்கனவே 100.000 இற்கும் மேற்பட்ட வாகனங்களுடனும், பியாஜியோவின் மேம்பட்ட இத்தாலிய வடிவமைப்பு மற்றும் வலுவான பொறியியலை உள்நாட்டு போக்குவரத்தில் முன்னணியில் கொண்டு வருகிறது.

இந்த வரிசையில் முன்னணியில் இருப்பது பியாஜியோ Ape டீசல் கார்கோ மாடல் (Ape Xtra DX) ஆகும்.

இது அதன் 435 CC எஞ்சினுடன் நகர்ப்புற மற்றும் கிராமப்புற நிலப்பரப்புகளில் பொருட்களை கொண்டு செல்வதற்கு ஏற்றது. அதன் மேம்படுத்தப்பட்ட சுமை சுமக்கும் திறன் மற்றும் எரிபொருள் திறன் மூலம், பியாஜியோ கார்கோ மாடல் இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள், வர்த்தகர்கள் மற்றும் விநியோகத்தர்களுக்கு ஒரு சிறந்த பலமாக இருக்க தயாராக உள்ளது. துடிப்பான வண்ணங்களில் வரும் இது நம்பகமான போக்குவரத்து மற்றும் வருமானத்தையும் மேம்படுத்தும் ஒன்றாக உள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பிரிவில் பியாஜியோ டீசல் பயணிகள் (Ape Auto DX) இடம்பெற்றுள்ளது. இது குறுகிய தெருக்கள் மற்றும் பெரு நகரங்கள் வழியான பயணத்திற்கு ஏற்றது. அதன் ஒப்பற்ற திறன் மற்றும் எரிபொருள் பயன்பாடு மூலம், சாரதிகள் மற்றும் தினசரி பயணிகளுக்கோர் சிறந்த தேர்வாகும். மேலும் பியாஜியோ EV பயணிகள் - சுத்தமான, அமைதியான மற்றும் அதிர்வு இல்லாத பயணத்தை வழங்கும் zero-emission மின்சார மாதிரியும் இதில் அடங்கும். 8kW Lithium-ion-அயன் பேட்டரியால் இயக்கப்படுகிறது. இது சுற்றுச்சூழல் நட்புறவான இயக்கத்திற்கும், நிலையான மற்றும் குறைந்த பராமரிப்பு தீர்வையும் வழங்குகிறது.

Piaggio Vehicles Pvt Ltd தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு.டியாகோ கிராஃபி தனது கருத்துக்களை வெளிப்படுத்துகையில், "தெற்காசியாவின் வளர்ச்சிக்கான பியாஜியோவின் தொலைநோக்குப் பார்வையுடன் இலங்கை முக்கியமானதோர் மூலோபாய இடத்தைப்பிடித்துள்ளது.

SINGER ஸ்ரீ லங்காவுடனான எங்கள் கூட்டாண்மை நாட்டில் பியாஜியோ நாமத்தின் வலுவான மற்றும் வெற்றிகரமான மறுநிறுவலுக்கு வழி வகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். SINGER எனும் நம்பகமான பெயர், விரிவான வாடிக்கையாளர் அணுகல் மற்றும் உறுதியான உள்கட்டமைப்பு ஆகியவை எங்கள் புதுமையான இயக்க தீர்வுகளை நாட்டிற்குக் கொண்டு வருவதற்கான ஒரு சிறந்த பங்காளியாக அமைகின்றன."

"உலகளாவிய பொறியியல் சிறப்பை உள்நாட்டின் பங்களிப்புடன் இணைக்கும் இந்த மூலோபாய அறிமுகத்தில் பியாஜியோ மற்றும் SINGER ஸ்ரீலங்காவை ஆதரிப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்" என ஐக்கிய அரபு எமிரேட்ஸின் சில்வர்லைன் வென்ச்சுராவின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. அனில் சந்திரன் கூறினார். இந்த அறிமுகம் நுண் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கட்டமைக்கப்பட்டுள்ளது. மேலும் இது இலங்கை முழுவதும் அடிமட்ட வருமான உருவாக்கம் மற்றும் பொருளாதார மறுமலர்ச்சிக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்."

நாட்டில் மாறிவரும் பொருளாதார சூழலுக்கு ஏற்ப தொடர்ந்து மாறிவரும் நிலையில், பியாஜியோ Ape வரிசை, மலிவு விலையுடன் அனைவரது தெரிவாக அமைவதோடு, தொழில்முனைவோரை வலுப்படுத்துதல் மற்றும் நாடு தழுவிய சமூகங்களுக்குக்கு முன்னேற்றத்தையும் கொண்டு வருவது உறுதியானதாகும்

வர்த்தக உலகம்



6 தசாப்த காலத்துக்கும் அதிகமாக வாழ்வின் கனவிற்கு அதிஷ்டத்தின் ஆசீர்வாதத்தை கொண்டுவரும் தேசிய லொத்தர் சபையானது 2025 ஆம் ஆண்டில் கடந்த 5 மாதத்திலே 18 சுப்பர் பரிசு வெற்றியாளர்களை உருவாக்கி உள்ளது. 2025.05.23 அன்று பத்தரமுல்ல விவசாய அமைச்சின் "கமத்தொழில் இல்ல" வளாகத்தில் 6 சுப்பர் பரிசு வெற்றியாளர்களுக்கு ரூ.15 கோடி 22 இலட்சத்துக்கும் அதிக பணத்தினை NLBT வழங்கியது. அவ்வாறு உருவான 6 சுப்பர் பரிசு வெற்றியாளர்களும் பெண்கள் என்பது விசேட அம்சமாகும். அதற்கான காசோலைகளை வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்- வசந்த சமரசிங்க, கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.சமன்மலி குணசிங்க,பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி. K.B.S ஒல்கா, தேசிய லொத்தர் சபையின் தலைவர் M.D.C.A. பெரேரா மற்றும் தேசிய லொத்தர் சபையின் பதில் பொது முகாமையாளர் சட்டத்தரணி சஞ்ஜீவ எதிரிசிங்க ஆகியோர் வழங்கி வைத்தனர்

# துர்க்கா முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம்

(சாவகச்சேரி)

கொடிகாமம்- தாவளை இயற்றாலை துர்க்கா மழலைகள் கல்விப் பூங்கா முன்பள்ளியின் 2025ஆம் ஆண்டிற்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத்தலைவர் திருமதி சி.விஜிதா தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும், இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமய தொண்டர் சபையின் தேசிய கண்காணிப்பாளருமான கலாநிதி வை.ஜெகதாஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (நி-8-30)



வடமாகாண சுகாதார மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு நிலவிய வெற்றிடங்களுக்குத் தகுதிவாய்ந்த குடும்பநல உத்தியோகத்தர்கள் மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(படம்:- சுபேசன்)

# தனங்கிளப்பு கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட தனங்கிளப்பு கமக்கார அமைப்பின் 2025-2026ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கு தனங்கிளப்பு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கமக்கார அமைப்பின் தலைவர் செ.தாம்பிரவர்ணன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பொதுக்கூட்டம் மற்றும் நிர்வாகத் தெரிவு ஆகிய நிகழ்வுகளில் கமக்கார அமைப்பின் அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர். (நி-8-30)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் ஜூன் மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை 5.45 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 12 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு பூந்தண்டிகைத் திருவிழாவும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உர இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அரச உரக் கம்பெனி லிமிடெட் மூலம் 15,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த விடயத்தை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (நி)

# சடலத்தை அடையாளம் காண்க

(யாழ்ப்பாணம்)

18.03.2025 அன்று இரவு 8.50 மணியளவில் பெயர், வயது, முகவரி என்பன தெரியாமல் கடற்கரை பிரதேசத்தில் உருக்குலைந்த நிலையில் வல்வெட்டித்துறை பிரதேச பொலிஸ் உத்தியோகத்தரினால் ஒப்படைக்கக்பட்ட சடலம் ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதனை அடையாளம் காண உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.எஸ். ஜமுனானந்தா அறிவித்துள்ளார். (நி)

## மணமகன் தேவை

**1998 இல் பிறந்த யாழ்.இந்து கௌரவ குடும்பம், உத்தரட்டாதி நட்சத்திரம் (3 ஆம் பாதம்)6 இல் சூரியன் செவ்வாய் உடைய மணமகளுக்கு மணமகன் தேவை.**

**கல்வித்தகைமை:-** B.Sc(Hons) in computer science- university of Jaffna
**தொழில்:-** Assistant lecturer
**எதிர்பார்ப்பு:- அரச, தனியார் சேவையில் பணி புரியும் பட்டதாரி மணமகன்**
**வயது வித்தியாசம்:-** 0-6
**தொடர்பு இல:-** 021 226 5435, 076 607 9405

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு அபிஷேகம், மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என் பன இடம்பெற்று விநாயகப் பெருமானின் திருவீதியுலாவும் இடம்பெறும் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார். (நி-3-8)

# மணி விழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அம்பலவாணர் லோகநாதனின் மணிவிழா நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு தேசிய கல்வியியற் கல்லூரியின் சரஸ்வதி கலையரங்கில் யாழ்ப்பா ணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி இ.லோகேஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (நி-3-8)

# இந்தியாவில் அசத்தும் இலங்கைத் தமிழன்



இந்தியாவின் கேரளாவில் தனது 'ராப்' பாடல்களைப் பாடி மக்கள் மனதைக் கவர்ந்து வருகிறார் வேடன் என்னும் கிரந்ததாஸ் முரளி. யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். சிறுவயது முதல் கவிதை எழுதுவது, பாடுவது என்பன இயல்பாகவே இவருக்குள் ஊற்றெடுத்தன. அவருடைய கருநிறத் தோற்றத்தால் அவருக்கு வேடன் எனும் பெயரை ஆதிக்க வர்க்கத்தினர் சூட்டி மகிழ்ந்தனர்.

எது அவனை ஒதுக்கியதோ அதற்கெதிராக அவன் கலையைக் கையிலெடுத்தான்.

ஒடுக்கப்பட்டவன் மேலெழுந்தால் அவனை அடக்க முடியாது என்பதற்கு வேடன் ஒரு எடுத்துக்காட்டு.

இன்று சமூக வலைத்தளங்களில் அவரது "ராப்" பாடல்கள் வைரலாகி வருகிறது.

இவரது பாடல்களில் சமூகத்தின் பிற்போக்குத் தனங்களான சாதியம், நிறவேறுபாடு மதவாதம் என்பவற்றை எதிர்க்கும் பாடல்களே.

உலகெங்கும் நடக்கும் அநீதிகளுக்கு எதிரான அவரது கருத்துக்கள் அவருடைய பாடல்கள் மூலம் வெளிப்பட்டு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. (நி-8)


# மணிவிழா வாழ்த்துக்கள்

## திரு. அம்பலவாணர் லோகநாதன்

(B.Sc, PGDE, M.Ed (Merit)




பெற்றோர் :-அம்பலவாணர் - தங்கம்மா
பிறந்த திகதி :-29.05.1965
மனைவி :-திருமதி.உமாதேவி லோகநாதன்
மகன் :- திரு. லோகநாதன் சிவசெல்வன்
மருமகள் :-திருமதி.கஜேந்தினி சிவசெல்வன்
பேத்தி :- சிவசெல்வன் லக்சிகா

- **ஆரம்பக் கல்வியில் இருந்து**
  க.பொ.த (சா/த)வரை-யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்
  க.பொ.த(உ/த)- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
- **தகைமைகள்**
  B.Sc-யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
  PGDE-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
  M.Ed (Merit) - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கல்விச் சேவைகள்

I.ஆசிரிய சேவை(SLTS)
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை - (14.03.1990-18.07.2000)
திரு/புனித மரியாள் கல்லூரி, தேசிய பாடசாலை -(19.07.2000-24.04.2003)
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி -(25.04.2003-10.05.2015)

II.விரிவுரையாளராக (SLTES)
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மட்டக்களப்பு -(11.05.2015-07.12.2018)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி- கோப்பாய்-
(08.12.2018-28.05.2025) ஓய்வு வரை
கல்விப் பணியில் நிறைவான 35 வருட சேவை

**வாழ்த்துவோர்**- கல்லூரிச் சமூகம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி

35 வருட அரச சேவையில் பணியாற்றி இன்றுடன் ஓய்வு பெறும் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய கல்வியியலாளர் திருவாளர் **அம்பலவாணர் லோகநாதன்** அவர்களின் மணி விழா இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உளமகிழ்கி றேன். பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாமல் சிலர் சாதனையாளராகி மாண்புறும் மனிதர்களாக வாழும் போது மாத்திரமன்றி மறைவுக்கு பின்னரும் நினைவு கூறும் வண்ணம் தாம் பிறந்த மண்ணிற்கு பெருமை சேர்க்கிறார்கள். அந்த வகை யில் அவ்வாறன ஒருவராக திரு. அம்பலவாணர் லோகநாதன் Sir அவர்களை நான் பார்க்கின்றேன்.

இவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் B.Sc.PGDE,M.Ed ஆகிய பட்டங்களைப் பெற்றுக் கொண்டவர். 1990.03.14 இல் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்று யாழ்/யூனியன் கல்லூரி, திருகோணமலை புனித மரியாள் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் பணியாற்றி கடந்த 2015 இல் ஆசிரிய கல்வியியலாளர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டார். பின் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாற்றிய பின்னர் இடமாற்றம் பெற்று 2018 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக தற்சமயம் வரை கடமையாற்றி வருகின்றார். இரசாயனவியல் பாடத்தை மிகச் சிறப்பாக கற்பிக்கக் கூடிய ஒரு விரி வுரையாளர் ஆவார்.

திரு. அ.லோகநாதன் Sir கல்வியியற் கல்லூரியின் விரிவுரை யாளராகப் பதவியேற்ற நாள் முதல் அயராது பணியாற்றி எமது கல்லூரியின் ஆசிரிய மாணவர்கள் மற்றும் சக விரிவுரையாளர்கள் அனைவருக்கும் நம்பிக்கைக்குரிய ஒருவராகச் செயற்பட்டு வந்த ஒருவர். இங்கு பணியாற்றிய காலத்தில் விஞ்ஞான பாடத்தை கற்பிப்பதிலும் ஆசிரிய மாணவர்களை ஆசிரியர் பணிக்கு உரியவர்களாக மாற்றி அமைப்பதிலும் வெற்றி கண்டவர். ஆசிரிய மாணவர் மத்தியில் நம்பிக்கை, அங்கீகாரம், நல்லுறவு நிலை ஆகியவற்றை வளர்த்து தனது ஆளுமையினால் தனது வளர்ச்சியினை சிறப்புற உறுதி செய்து கொள்ளவும் அவருக்கு சாத்தியமாயிற்று. தமது மேம்பாட்டுக்காக அயாராது உழைத்து கல்வி, கலை,கலாசாரம் ஆகியவற்றிலும் தம்மைத் திறம்பட செம்மைப்படுத்திக் கொண்ட திரு.அ.லோகநாதன் சேர் அவர்கள் பொது வாழ்க்கையில், குடும்ப வாழ்க்கையில் நல்ல குடிமகனாக அடையாளப்படுத்திக் கொள்ளவும் தவறவில்லை. விஞ்ஞான மன்றம், இந்து மன்றம், பௌர்ணமி விழா நிகழ்வு, கல்லூரியின் அடையாளமான குருதீபம் மாத இதழ் வெளிவருவதிலும் காத்திரமாக உழைத்தவர். கல்லூரியின் நிர்வாக செயற்பாடுகளிலும் அவ்வப்போது அவரது பங்கேற்பு குறிப்பிடதக்கதாக இருந்து வந்துள்ளது.

பழகுவதற்கு இனியவராகவும், நல்ல நண்பராகவும் சில காலமே லோகநாதன் சேருடன் நான் பழகியுள்ளேன். மற்றவர்களை மதித்து நடக்கும் பண்பையும், மரியாதையுடன் பழகும் பண்பையும் அவரிடம் கண்டு வியந்துள்ளேன். ஆசிரிய மாணவர்கள் மீது அன்பு செலுத்துவதையும் அவதானித்துள்ளேன். அவரின் மணிவிழா நாளில் கலந்து கொண்டு வாழ்த்துவதோடு மணிவிழா மலருக்கு இச்செய்தியை வழங்குவதன் மூலம் எனது உறவை மேலும் வலுப்படுத்தி கொள்கிறேன். அவர் இன்னும் பல சேவைகள் செய்து மக்கள் தொண்டனாக, ஆன்மீகவாதியாக நீடூழி வாழ வேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

**இரா.லோகேஸ்வரன், பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி-கோப்பாய்.**

(சி-3057)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## எர்டோகனுக்கு நன்றி தெரிவித்த ஷெபாஸ் ஷெரீப்

(கொழும்பு)

துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகனை சந்தித்து பேசிய பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், இந்தியா மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு உதவியதற்காக நன்றி தெரிவித்தார்.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றமான சூழல் உருவானது. மத்திய அரசின் ஆப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையை அடுத்து, நம் எல்லை மாநிலங்களில் பாகிஸ்தான் ட்ரோன் வாயிலாக தாக்குதல் நடத்தியது. இந்த மோதலில், மேற்காசிய நாடான துருக்கியின் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன. இதற்காக, பாகிஸ்தானுக்கு ட்ரோன்களை வழங்கிய துருக்கி, அதை செயற்படுத்துவதற்கான வீரர்களையும் அனுப்பி வைத்தது.


இந்த சூழலில், அரசு முறை பயணமாக துருக்கிக்கு, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்றார். இந்த பயணத்தின் போது, இஸ்தான்புல்லில் ஜனாதிபதி தையிப் எர்டோகனை அவர் சந்தித்து பேசினார்.

அப்போது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம், பாதுகாப்பு உற்பத்தி, உட்கட்டமைப்பு மேம்பாடு, விவசாயம் ஆகியவற்றில் இருநாடுகளும் இணைந்து செயற்படுவது குறித்து முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த சந்திப்பின் போது, இந்தியாவுக்கு எதிரான தாக்குதலின் போது உதவியதற்காக துருக்கி ஜனாதிபதி மற்றும் அந்நாட்டு மக்களுக்கு பாக்., பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் நன்றி தெரிவித்தார்.

இதை தன் சமூக வலைத்தள பக்கத்தில் அவர் உறுதிப்படுத்தியுள்ளார். அதில் இஸ்தான் புல்லின் சகோதரர் எர்டோகனை சந்தித்தேன். சமீபத்தில் பாகிஸ்தான் , இந்தியா மோதலில் பாகிஸ்தானுக்கு அவர் அளித்த உறுதியான ஆதரவுக்கு நன்றி தெரிவித்தே அசைக்க முடியாத சகோதரத்துவம் மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் இன்னும் நெருக்கமாக செயற்படுத்துவதற்கான உறுதியை நாங்கள் எடுத்தோம் எனத் தெரிவித்துள்ளார். (நி)

## போர்க்கப்பல் சோதனை தோல்வி
### அதிகாரிகளை கைது செய்த வடகொரிய ஜனாதிபதி




(பியாங்யாங்)

போர்க் கப்பலொன்று சோதனையோட்டத்தின் போது சரிந்து விழுந்த சம்பவம் தொடர்பில் குறித்த போர்க் கப்பலின் தயாரிப்பில் ஈடுபட்ட முக்கிய அதிகாரிகளை கைது செய்யுமாறு வடகொரிய ஜனாதிபதி உத்தர விட்டுள்ளார்.

வட கொரியாவின் சோங்ஜின் நகரில் அமைந்துள்ள முக்கியமான போர் கப்பல் தயாரிக்கும் தொழிற்சாலையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது

சம்பவ தினத்தன்று சுமார் 5,000 தொன் எடை கொண்ட குறித்த கப்பலை சோதனையோட்டத்திற்காக கடலுக்குள் விட்டபோது அது திடீரென ஒரு பக்கமாக சாய்ந்துள்ளதோடு அதன் அடிப்பகுதி சேதமடைந்துள்ளதாகவும், இதனால் கடல்நீர் அக்கப்பலுக்குள் புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் குறித்த கப்பல் வடிவமைப்புத் தலைவர், கட்டுமானத் துறைத் தலைவர் மற்றும் நிர்வாகத் துணை மேலாளர் ஆகியோரைக் கைது செய்யுமாறு அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங்-உன் உத்தர விட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த 3 அதிகாரிகளும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜூன் மாதத்தில் நடைபெற உள்ள தொழிலாளர் கட்சியின் முக்கியக் கூட்டத்திற்கு முன்பாக குறித்த கப்பல் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் தயாராக இருக்க வேண்டும் என்ற உத்தரவையும் கிம் பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## லிவர்பூலின் வெற்றி அணிவகுப்பில் கார் மோதி விபத்து
### 50 பேர் காயம்

(லண்டன்)

இங்கிலாந்து நகரில் லிவர்பூல் கால்பந்து கழகத்தின் பிரீமியர் லீக் வெற்றியைக் கொண்டாடிய ரசிகர்கள் கூட்டத்திற்குள் ஒரு கார் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முனத்தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட இந்த விபத்தில் சுமார் 50 பேர் காயமடைந்தனர்.

அவர்களில் 27 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

53 வயதான கார் சாரதியான பிரித்தானியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பயங்கரவாதத்துடன் தொடர்புடையதாக நம்பப்பட வில்லை என்று பொலிஸாரின் ஆரம்ப அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

சமூக ஊடகங்களில் வெளியான காணொளிகளில் தெருவில் வரிசையாக நின்றிருந்த இரசிகர் கூட்டத்திற்குள் ஒரு கார் வேகமாகப் பயணித்து விபத்தை ஏற்படுத்துவதை காண்பிக்கின்றது.

நேரில் கண்ட சாட்சிகளின் கூற்றுப்படி, பாதிக்கப்பட்டவர்களில் சிலரை முதலில் மோதிய பின்னர் கார் நின்றது.

தொடர்ந்து மக்கள் வாகனத்தை நோக்கி விரைந்து வந்து, அதன் கண்ணாடிகளை உடைத்ததாகவும், சாரதி தொடர்ந்து காரை செலுத்தி பலர் மீது மோதியதாகவும் கூறப்படுகிறது.

கார் நின்றதும், ஆத்திரமடைந்த ரசிகர்கள் அதைச் சூழ்ந்து கொண்டு, அதன் ஜன்னல்களை உடைத்தனர், பின்னர், பொலிஸார், அதிகாரிகள் தலையிட்டு சாரதியை அவர்கள் அடைய விடாமல் தடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்தில் மிகவும் புகழ்பெற்ற ஆண்கள் கால்பந்து அணியான லிவர்பூல் மற்றும் ஊழியர்கள் பிரீமியர் லீக் கிண்ணத்துடன் நகர மையத்தில் திறந்த மேல் பேருந்தில் அணிவகுத்துச் சென்றபோது இலட்சக் கணக்கான ரசிகர்கள் தெருக்களில் வரிசையாக நின்றபோது இந்த சம்பவம் நடந்துள்ளது. (நி-8)



இ
ப



தனது ஈ
காஷ்மீர், ப
மற்றும் வர்த்
பிரச்சினைக
வுடன் அ
நடத்துவதற்
பாகிஸ்தான்
தெரிவித்தத


ஈக்வ
நிலை



(ஈக்வடார்
ஈக்வடார்
மிகப்பெரிய
சுத்திக ரிப்பு
பயங்கர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிப் பேச்சுவார்த்தைக்கு தயார் பாகிஸ்தான் பிரதமர் அறிவிப்பு



**(இஸ்லாமாபாத்)**

**பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் ஆப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கை காரணமாக இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மோதல் நிலை அதிகரித்து வரும் நிலையில் இந்தியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.**

தனது ஈரான் பயணத்தின் போது, காஷ்மீர், பயங்கரவாதம், நீர் பங்கீடு மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட 'அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க' இந்தியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராக இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள் ளன.

இதுதொடர்பாக ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷேஷ் கியனுடன் தெஹ்ரானில் நடைபெற்ற கூட்டு செய்தியாளர் சந்திப்பில் பேசிய பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், 'காஷ்மீர் பிரச்சினை மற்றும் நீர் பிரச்சினை உட்பட அனைத்து சர்ச்சைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க விரும்புகிறோம், மேலும் வர்த்தகம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு குறித்து நமது அண்டை நாடுகளுடன் பேசவும் தயாராக இருக்கிறோம்.

'சமாதான முன்மொழிவு' ஏற்றுக்கொள்ளப் பட்டால், அவர்கள் (இந்தியா) 'உண்மையிலேயே அமைதியை தீவிரமாகவும் உண்மையாகவும் விரும்புகிறார்கள்' என்பதைக் காண்பிப் பார்கள். இந்தியாவுடனான மோதலில் இருந்து எங்கள் நாடு 'வெற்றி' அடைந்தது' எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ஆக்கிரமிப்பு காஷ்மீர், பயங்கரவாதிகளை ஒப்படைப்பது குறித்து மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்ற தனது நிலைப்பாட்டை இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இந்த சூழலில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா செய்யத் அலி கமேனியும் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான போர்நிறுத்தம் குறித்து உரையாற்றுகையில், 'பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மோதல்கள் நிறுத்தப் பட்டதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

மேலும் இரு நாடுகளுக்கும் இடை யிலான சர்ச்சைகள் விரைவில் தீர்க்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்' என்று அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஈக்வடாரில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பயங்கர தீ விபத்து!



(ஈக்வடார்)

ஈக்வடார் நாட்டில் உள்ள மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

இருப்பினும் விரைவில் தீ கட்டுக்குள் கொண்டு வரப் பட்டதாக அந்நாட்டின் எரிசக்தி அமைச்சர் தெரிவித்தார். இருப்பினும் முன்னெச்சரிக்கையாக எஸ் மரால்டாஸ் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் நிறுத்தப் பட்டுள்ளதாக அந் நிறுவனம் தெரிவித்தது.

மேலும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள அனைத்து பணியாளர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதால் யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை. இந்தத் தீ விபத்து குறித்து விசாரணை நடந்து வருவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

## உக்ரைனை ஒரே இரவில் 355 ட்ரோன்களால் தாக்கிய ரஷ்யா

(கீவ்)

ரஷ்யா-உக்ரைன் இடையே 3ஆவது ஆண்டாக, போர் நீடித்து வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்து வந்தனர். அவர்களின் கோரிக்கையை நிராகரித்து வந்த ரஷ்ய ஜனாதிபதி புடின், சமீபத்தில் தானாக போர் நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த சம்மதம் தெரிவித்தார். அதன்பின்னர், இரு நாட்டு முக்கிய பிரமுகர்கள், துருக்கி நாட்டின் தலைநகரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது போர்க் கைதிகளை பரிமாறிக் கொள்ள இரு நாடுகளும் சம்மதம் தெரிவித்தன. ஆனால் போர் நிறுத்தம் செய்வதில் உடன்பாடு எட்டப்பட வில்லை.

போர் தொடர்ந்து வரும் நிலையில் ஒப்பந்தப்படி, இரு நாடுகள் இடையே போர்க்கைதிகள் பரிமாற்றமும் நடந்து வந்தது. கடந்த வெள்ளிக்கிழமை, கைதிகளாக வைக்கப்பட்டிருந்த இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் 390 பேர், சனிக்கிழமை 307 பேர், ஞாயிற்றுக்கிழமை 303 பேர் பரிமாறிக் கொள்ளப்பட்டனர்.

இதற்கிடையே ரஷ்யா, ஒரே நாள் இரவில் 300இற்கும் அதிகமான ட்ரோன்களை ஏவி உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி உள்ளது.

ட்ரோன் தாக்குதலுக்கு முந்தைய நாள் ரஷ்யா 9 ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தி இருந்தது. அதற்கும் முந்தைய நாள் ரஷ்யா நடத்திய ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலில் 12 உக்ரைனியர்கள் கொல்லப்பட்டனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மின்கட்டண திருத்தம் தொடர்பான

# கருத்துக்கோரும் நடவடிக்கை யாழில் முன்னெடுப்பு



(அராலி)

இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்ட 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதிக்கான மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பான மாற்றுப் பரிந்துரை குறித்து பொதுமக்களிடம் கருத்துக் கோரும் நடவடிக்கை நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமான குறித்த கலந்துரையாடல் ஜூன் 3 ஆம் திகதி வரை அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் பொது மக்களின் கருத்துக்கள் பெறப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிறுவன தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்திருந்தார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் பேராசிரியர் கே.பி.எல் சந்திரலால்,

பிரதிப் பணிபளர் நாயகம் கலாநிதி நிலந்த சப்புமானகே, இலங்கை பொதுபயன்பாடுகள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க உள்ளிட்ட பிரதானிகள் பிரசன்னத்துடன் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. (நி-8-104)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 09 -- 05 -- 1949 | 15 -- 05 -- 2025 |



## ரங்கா விவேகானந்தன் (பார்த்)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, சென்னை, ஜேர்மனி, இந்தோனேசியா, புவனஸ் ஐரிஷ் (Buenos aires) (ஆஜென்ரீனா) ஆகிய இடங்களை வதிவிடமாகக் கொண்ட திருமதி. ரங்கா பார்த் அவர்கள் மே 15 ஆம் திகதி வியாழக்கிழமை புவனஸ் ஐரிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி விவேகானந்தன், இராஜரத்தினம் அம்மாள் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ் சென்றவர்களான ஜேர்மனியைச் சேர்ந்த திரு.திருமதி.பார்த்தின்அவர்களின் அன்பு மருமகளும், றுடோல்வ் பார்த்தின் அவர்களின் ஆசை மனைவியும், மாதங்கி மாயா அவர்களின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஆழிக்குமரன் ஆனந்தன் மற்றும் ரஞ்சிதமணி (ரஞ்சி USA), ரட்னேஸ்வரி (ராதா UK), கலாநிதி நித்தியானந்தன் (ரஞ்சன் UK), காலம்சென்ற ரூபமணி மற்றும் சிவானந்தன் (பாபு- Germany), ரவீந்திரானந்தன் (ரவி UK), கருணானந்தன் (கண்ணன் UK), கோகிலா (canada ) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மாணல், ரவீந்திரன், சுரேந்திரதாஸ், செல்வராணி, ரங்கநாதன், மகாமாசிதேவி, லதா, கலைவாணி, வரதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் மே மாதம் 19 ஆம் திகதி ஆர்ஜென்ரீனாவில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-3061)

தொடர்புகளிற்கு

ரஞ்சிதமணி (ரஞ்சி, அமெரிக்கா) - +1 781 715 3052
சிவான்தன் (பாபு, ஜேர்மனி) - +49 1625 824 315
ரவீந்திரானந்தன் (ரவி) - +44 7884 008 311
கருணானந்தன் (கண்ணன்) - +44 7757 235 488
whatsapp

தகவல்
குடும்பத்தினர்

# இன்று ஒரு தகவல் 381

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## படித்ததும் பார்த்ததும்!

காசியிலே ஒரு பண்டிதர் இருந்தார். நிறைய படித்தவர் அதனால்தான் பண்டிதர். அவர் ஒரு நாள் ஏதோ ஒரு ஊருக்குச் சென்றுகொண்டிருந்தார். வழியிலே மழை பெய்தது. "சரி மழை நிற்கும் வரைக்கும் பக்கத்தில் எங்கேயாவது ஒதுங்கி இருந்து விட்டுப் புறப்படுவோம் என்று நினைத்தார். பார்த்தார். அங்கே ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டுத் திண்ணையிலே போய் உட்கார்ந்தார்.

அந்த வீட்டுமாடியிலே ஒரு அம்மா குடியிருந்தார்கள்.

அந்த சமயத்திலே தெருவிலே சில பேர் ஒரு பிணத்தைத் தூக்கிக்கொண்டு சென்றார்கள். அதைப் பார்த்தவுடனே அந்த அம்மா, தன் பக்கத்திலே நின்று கொண்டிருந்த ஒரு சிறுமியை அழைத்தார்.

"இதோ பாரம்மா இறந்து போனவர் எங்கே போகிறார்? சொர்க்கத்திற்குப் போகிறாரா? நரகத்திற்குப் போகிறாரா? என்று விசாரித்து வா!" என்று சொன்னார்.

உடனே "சரி" என்று சொல்லி விட்டு அந்தச் சின்னப் பெண் வெளியே ஓடியது.கொஞ்ச நேரத்திலே திரும்பி வந்தது.

"அவர் சொர்க்கத்திற்குப் போகிறார்!" என்று சொல்லியது.

கொஞ்ச நேரம் ஆனது. மழை ஓயவில்லை. பண்டிதர் இன்னமும் அந்தத் திண்ணையிலேதான் உட்கார்ந்திருந்தார். இந்த சமயத்திலே இன்னொரு பிணத்தை சில பேர் தூக்கிக்கொண்டு அந்த வழியாக சென்றார்கள்.

மாடியிலே இருந்த அந்த அம்மா, மறுபடியும் அந்த சிறுமியை அழைத்தார்.

"இதோ பாரம்மா இப்போது தூக்கிக் கொண்டு செல்கிறார்களே இவர் எங்கே போகிறார் என்பதை விசாரித்துவிட்டு வா." என்றார்.

அந்த சின்னப் பெண் .மறுபடியும் வெளியே ஓடியது. கொஞ்சநேரம் கழித்து திரும்ப வந்தது.

"இவர் நரகத்திற்குப் போகிறார்." என்று சொல்லியது. இவ்வளவையும் அந்தப் பண்டிதர் பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஒரே ஆச்சரியம் ,குழப்பம்.

யோசித்துப் பார்த்தார்: "நானும் எவ்வளவோ சாஸ்திரம் எல்லாம் படித்தேன். இருந்தாலும் ஒருவன் இறந்த பிறகு எங்கே போகிறார் என்று தெரிந்து கொள்ள முடியவில்லையே! ஆனால் இந்த சின்னப் பெண் எங்கேயோ ஓடியது- திரும்ப வந்தது - எங்கே போகிறார் என்பதை விவரமாகச் சொல்கிறது அது எப்படி ?" பண்டிதர் யோசித்தார். ஒன்றும் புரியவில்லை "சரி நேரிலேயே கேட்போம்" என்று முடிவு செய்து மாடிக்குப் போனார்.

அந்த அம்மா அவரை வரவேற்று "என்ன வேண்டும்" என்று கேட்கிறார்.

"ஒருவர் சொர்க்கத்திற்குப் போகிறாரா? நரகத்திற்குப் போகிறாரா? என்பதை அந்த சின்ன பெண் எப்படி கண்டுபிடித்தது?" என்று கேட்கிறார்.

உடனே அந்த சிறுமியே அவர் முன்னால் வந்து நின்று விவரம் சொல்ல ஆரம்பிக்கிறது. "முதலிலே ஒருவரை தூக்கிக் கொண்டு போனார்களே அவர் வாழ்ந்த இடம் எது என்று விசாரித்துக் கொண்டு போனேன். அங்கே எல்லோரும் அழுது கொண்டிருந்தார்கள்.

மகராசன் போய் விட்டார் எவ்வளவோ நல்ல காரியம் செய்தார். தானதருமங்கள் செய்தார். அடுத்தவர்களுக்கு உதவியாக இருந்தார். அவர் போய் விட்டாரே என்று சொல்லி அழுதுகொண்டிருந்தார்கள். அதனாலே அவர் சொர்க்கம் போகின்றார் என்று முடிவு செய்தேன்.

இரண்டாவதாக ஒருத்தர் உடலை தூக்கிக் கொண்டு போனார்களே அவர் வீட்டையும் தேடிக் கொண்டு போனேன். அங்கே எல்லோரும் சந்தோஷமாக இருந்தார்கள் அயோக்கியன் தொலைந்தான் எவ்வளவு அக்கிரமம் செய்துகொண்டிருந்தான் இனிமேல் நமக்கு கவலை இல்லை என்று சொல்லி எல்லோரும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதனாலே அவர் நரகத்திற்குப் போகிறார் என்று முடிவு செய்தேன்" அப்படி என்றாள் அந்த சிறுமி.

இதைக் கேட்ட பிறகுதான் அந்தப் பண்டிதருக்கு தான் படித்த ஒரு விடயம் ஞாபகத்திற்கு வந்தது. அதாவது "நல்ல காரியங்கள் செய்பவர்கள் நல்ல கதி அடைகிறார்கள். கெட்ட காரியங்கள் செய்பவர்கள் கெட்ட கதி அடைகிறார்கள்" என்று அவர் சாஸ்திரத்திலே படித்தது ஞாபகத்திற்கு வந்தது.

எவ்வளவு படித்து என்ன பிரயோசனம்? படித்தது ஞாபகத்திற்கு வருவதற்கு ஒரு சின்ன பெண்ணின் உதவி தேவைப்படுகிறது.

நரகத்திற்குப் போய் சேர்ந்த ஒரு ஆள் தன் பக்கத்திலே இருந்த இன்னொருத்தனிடம் பேசிக் கொண்டிருந்தான்.

"நான் இறந்து போன போதுகூட எங்கள் ஊரிலே பல பேர் கூடி நின்று அழுதார்கள் இருந்தாலும் கூட நான் சொர்க்கத்திற்குப் போகவில்லை. நரகத்திற்கு வந்து விட்டேன்" என்றான் அவன்.

"அது எப்படி?" என்று கேட்டான் பக்கத்திலே இருந்த ஆள்.

"அழுதவர்கள் அத்தனை பேரும் எனக்குக் கடன் குடுத்தவர்கள்" என்றான் இவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரமாகப் பரவும் சிக்குன்குனியா
## சுகாதாரத்துறை மீண்டும் எச்சரிக்கை !

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது சிக்குன்குனியா முக்கிய நகர்ப்புறங்களில் வேகமாகப் பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.**

இது கிட்டத்தட்ட 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த வைரஸின் மிகக் கடுமையான மீள் எழுச்சியைக் குறிக்கிறது. கடவத்தை, கொத்தொடுவ, பத்தரமுல்லை மற்றும் கம்பஹாவின் நெரிசலான பகுதிகள் ஆகியவை அதிகம் ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

காய்ச்சல், மூட்டு வலி, குளிர் மற்றும் உடல் வலிகள் இதன் பொதுவான அறிகுறிகளாக பார்க்கப்படுகிறது.

சில நோயாளிகளில், மூட்டு வலி வாரக்கணக்கில் நீடிக்கும்.

ஒருவருக்கு ஒருவர் தொடர்பு கொள்வதன் மூலம் இது பரவாது. நுளம்பு கடிப்பதால் மட்டுமே பரவுகிறது.

கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் நாட்பட்ட நோய்கள் உள்ளவர்கள் இது தொடர்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இதேவேளை, இலங்கையில் சிக்குன்குனியா ஒரு சுகாதார ஆபத்து என்று கூறி, அமெரிக்காவும் இங்கிலாந்தும் தங்கள் பயண எச்சரிக்கைகளை புதுப்பித்துள்ளன.

மேலும் நோய் பரவுவதைத் தடுக்க, மேல் மாகாணத்தில் ஒரு வார கால டெங்கு மற்றும் நுளம்புக் கட்டுப்பாட்டு பிரச்சாரத்தை சுகாதார அதிகாரிகள் தொடங்கியுள்ளனர். (நி)

# மன்னாரில் நிர்மாணிக்கப்பட்ட 24 வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

(மன்னார்)

இந்திய-இலங்கை அரசாங்கத்தின் நிதி உதவியுடன் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஜிம் பிறவுண் நகர் கிராமத்தில் அமைக்கப்பட்ட 24 வீடுகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பீ.சரத், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இதன் போது மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், பிரதேச செயலாளர் எம்.பிரதீப், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (8-285)

# தே.ம.ச உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம்!



(வவுனியா)

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வவுனியாவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள வன்னிப் பிளாசா விடுதியில் நேற்றைய தினம் குறித்த நிகழ்வு இடம் பெற்றிருந்தது.

இதன்போது வவுனியாவில் உள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் மற்றும் விகிதாசார உறுப்பினர்கள் கலந்து கொண்டு தமது சத்திய பிரமாணத்தை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வு கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனின் முன்னிலையில் இடம் பெற்றிருந்தது.

கடந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வவுனியாவில் உள்ள சபைகளில் 26 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-250)

# ஆசியாவின் தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஈழத்தமிழர்கள் இருவர் தெரிவு

(கொழும்பு)



ஆசியாவின் சிறந்த விஞ்ஞானிகள் 100 பேரில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியர் சுந்தரலிங்கம் திருக்கணேஷ் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

சிங்கப்பூரை தளமாகக் கொண்டு வெளியாகும் 'ஆசிய விஞ்ஞானி என்ற சஞ்சிகை ஆசியாவின் சிறந்த விஞ்ஞானிகள்-100 பட்டியலை வெளியிட்டுள்ளது.

ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்தப் பட்டியல், ஆசியாவிலுள்ள தலைசிறந்த விஞ்ஞானிகளின் விசேட சாதனைகளை அங்கீகரிக்கிறது. பொதுவாக இந்த பட்டியலில் தேர்வு செய்யப்படும் தலைசிறந்த விஞ்ஞானிகள், அவர்களின் தரமான ஆய்வு வெளியீட்டுக்கப்பால் தேசிய அல்லது சர்வதேச விருதை பெற்றிருக்க வேண்டும்.



பதிலாக முக்கியமான விஞ்ஞான கண்டுபிடிப்பொன்றை மேற்கொண்டிருக்க வேண்டும் அல்லது கல்விசார் அல்லது தொழில்சார் தலைமைத்துவத்தை வழங்கியிருக்க வேண்டும்.

அதன்படி விஞ்ஞானப் பீடாதிபதியாக கடந்த ஐந்து ஆண்டுகள் பணியாற்றி வரும் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் பல தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

இவற்றில் துணைவேந்தர்கள் இயக்குனர்கள் சபையினரால் வழங்கப்பட்ட பௌதிக விஞ்ஞானத்திற்கான அதி சிறந்த இள ஆராய்ச்சியாளர் விருது, தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்பட்ட இள விஞ்ஞானி விருது, மற்றும் தேசிய ஆராய்ச்சி பேரவை பல தடவைகள் வழங்கிய சிறந்த ஆராய்ச்சி வெளியீட்டுகளுக்கான ஜனாதிபதி விருதுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

சர்வதேசத்தரத்திலான இவரது ஆய்வுச் செயற்பாடுகளினால் ஆசியாவின் தலைசிறந்த 100 விஞ்ஞானிகளில் ஒருவராக தெரிவாகியுள்ள சிரேஷ்ட பௌதிகவியல் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு மட்டுமல்லாது யாழ் மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இதேவேளை ஆசிய பிராந்தியத்தின் சிறந்த 100 விஞ்ஞானிகளில் பெருமையுடன் பட்டியலிடப்பட்டுள்ள கணிதத் துறையின் மூத்த பேராசிரியர் எஸ். திருக்கணேஷின் குறிப்பிடத்தக்க சர்வதேச சாதனையை இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் பெருமையுடன் அறிவித்துள்ளது.

இந்த மதிப்புமிக்க அங்கீகாரம், கணிதத் துறையில் மூத்த பேராசிரியர் திருக்கணேஷ் ஆற்றிய விதிவிலக்கான ஆராய்ச்சிப் பங்களிப்புகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது மற்றும் ஆசியாவின் முன்னணி அறிவியல் சிந்தனையாளர்களில் ஒருவராக அவரது அந்தஸ்தை அங்கீகரிக்கிறது. (நி)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 400 | 350 | 450 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 400 | 500 |
| தக்காளி | 700 | 750 | 800 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 450 | 500 | 500 | 350 | 500 |
| கரட் | 850 | 900 | 750 | 700 | 800 |
| பூசணி | 150 | 180 | 180 | 170 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-300 | 250 | 280 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 250 | 200 | 150 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 200 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 200 | 300 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 600 | 500 | 500 | 450 | 600 |
| கறிமிளகாய் | 800 | 700 | 500 | 500 | 1000 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 800 | 800 | 1200 |
| போஞ்சி | 500 | 500 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 300 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 120 | 100-150 | 150 | 100 | 200 |
| தேசிக்காய் | 400 | 250 | 400 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 150 | 150-250 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 500 | 600 | 800 |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 150 | 320 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | -- | -- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 784





ஆ! அக்கிழவருக்குத்தான் பொண்டாட்டியின் பேரில் எவ்வளவு ஆசை!" என்று சொல்லி மணிமேகலை சிரித்தாள். வந்தியத்தேவன் முதல் தடவை பழுவேட்டரையர் வந்த போது நடந்ததையெல்லாம் நினைத்துக் கொண்டான்.

"அப்படியா? பழுவேட்டரையருக்குப் பழுவூர் ராணி பேரில் ரொம்ப ரொம்ப ஆசையா?" என்று கேட்டான். "அது நாடு நகரம் எல்லாம் தெரிந்த விஷயம் ஆயிற்றே! போன தடவை, எட்டு மாதங்களுக்கு முன்னால் இங்கே ஒரு தடவை அவர்கள் வந்திருந்தார்கள். பழுவூர் ராணி அந்தப்புரத்துக்கு வரக் கூடக் கிழவர் விடவில்லை! அப்படிக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்கிறார். இந்தத் தடவை சில நாட்கள் இங்கே இருக்கப் போகிறார்களாம். பழுவூர் ராணிக்குத் தனி அந்தப்புரம் வேண்டுமென்று ஒரே தடபுடல். இந்தத் தடவையாவது எங்களையெல்லாம் பார்க்கப் போகிறாளோ பார்ப்பதற்குக் கிழவர் விடப் போகிறாரோ, தெரியவில்லை."

"அப்படியானால் நான் இப்பொழுது என்ன செய்யட்டும்?" "அதுதான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன் ஆ! ஒரு யோசனை தோன்றுகிறது. என் தமையன் கந்தமாறனுடைய தனி ஆயுத அறை ஒன்று இந்த மாளிகையில் இருக்கிறது. அதில் உம்மைக் கொண்டு விடுகிறேன். நாளை சாயங்காலம் கந்தமாறன் வந்துவிடுவான் அதுவரையில் அங்கேயே இரும். நீர் சொல்வதின் உண்மை, பொய்யைக் கந்தமாறனிடம் நேரில் நிரூபித்து விடலாம்" "இளவரசி! அது முறையன்று! மிகவும் ஆபத்தான காரியம்!" "என்ன ஆபத்து?"

"அங்கே நான் எப்படி வந்து சேர்ந்தேன் என்று கந்தமாறன் கேட்டால் என்ன பதில் சொல்லுவது?" "உள்ளது உள்ளபடி சொல்லுகிறது."

"உள்ளது உள்ளபடி நான் இப்போது சொன்னதை நீங்களே நம்பவில்லையே? அடுத்த அறையில் என்னைத் தேடி வந்த ஆட்கள் இருக்கும் போதே?" "ஐயா! அதை இப்போதே சோதித்து விடுகிறேன்." "என்ன சோதிக்கப் போகிறீர்கள்?"

"அடுத்த அறைக்குள் சென்று அந்த மனிதர்களைப் பார்த்து விசாரிக்கப் போகிறேன். அவர்கள் உம்மைக் கொல்ல வந்தவர்களா? அல்லது நீர் அழைத்து வந்தவர்களா என்று தெரிந்து கொண்டு வருகிறேன்."

"ஐயோ! அவர்கள் பொல்லாத துஷ்டர்கள் தாங்கள் அவர்களிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டால்"

"என் அரண்மனையில் யார் என்னை என்ன செய்ய முடியும்? இதோ பாருங்கள்!" என்று கூறி மணிமேகலை யாருக்கும் தெரியாமல் தன் இடுப்பில் செருகியிருந்த சிறிய மடக்குக் கத்தியை எடுத்துக் காட்டினாள்.

"யாரும் என்கிட்ட வரமுடியாது அப்படி ஏதாவது ஆபத்து வருவதாயிருந்தால் நீர்தான் சூராதி சூரர் இங்கே இருக்கிறீரே!" "அம்மணி! என்னிடம் தற்சமயம் ஆயுதம் ஒன்றுமில்லை."

"வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்று நீர் கேட்டதில்லையா? உமது பெயரே வல்லவரையர் ஆயிற்றே? ஆயுதம் கையில் இருந்தால் பெண்பிள்ளைகள் கூடச் சண்டை போடுவார்கள். ஆண்பிள்ளைகள் எதற்கு? உமக்கு வீண் கவலை வேண்டாம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அதிபுத்திசாலிகள்



முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் வாழும் மக்கள், இந்த உலகத்திலேயே தாங்கள்தான் பெரிய அறிவாளிகள் என்று நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் அனைவரும் சரியான முட்டாள்கள் என்பது அவர்களுக்கு தெரியாது.

ஒருநாள் அவர்கள் மரத்தால் ஒரு பெரிய வீடு கட்டத் தீர்மானித்தனர். அதற்கான நல்ல மரத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக அவர்கள் காட்டுக்குப் போக முடிவு செய்தனர். அப்போது, அவர்களில் மிகவும் அதிபுத்திசாலியான ஒருவன் சொன்னான்.

"நான் குதிரை வண்டியில் ஏறி முதலில் போகிறேன். நீங்களெல்லாம் பின்னால் வாருங்கள்!" என்றான்.

எல்லாரும் அதை ஏற்றுக் கொண்டனர். அதிபுத்திசாலி குதிரை வண்டியில் ஏறி காட்டுக்குப் பாய்ந்து சென்றான். ஆனால், வழியில் அவன் குதிரை வண்டி ஒரு கல்லின் மீது ஏறியதால் கவிழ்ந்தது. அவன் கையிலிருந்த கோடாரி தூரத்தில் சென்று விழுந்தது. அவனும் ஆழமான ஒரு குழியில் விழுந்து விட்டான். குதிரை வண்டிக்குப் பின்னால் வந்த மற்ற அறிவாளிகள், அதிபுத்திசாலியின் கோடாரி வழியில் கிடப்பதைப் பார்த்தனர். அவர்களில் மிகச் சிறந்த அறிவாளி அவன்தான் என்பதால், அவன் கோடாரியை விட்டுச் சென்றதற்கு ஏதும் முக்கியமான காரணம் இருக்கும் என்று மற்றவர்கள் நினைத்தனர். அதனால், எல்லாரும் மரம் வெட்டுவதற்காகத் தங்கள் கையில் எடுத்து வந்திருந்த கோடாரியை அப்படியே போட்டு விட்டுத் தொடர்ந்து சென்றனர்.

காட்டுக்குச் சென்று வெட்டுவதற்கு ஏற்ற மரத்தைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், யார் கையிலும் கோடாரி இல்லையே, பிறகு எப்படி மரம் வெட்டுவது? எல்லாரும் ஒன்றாக அமர்ந்து இதற்கு என்ன வழியென்று சிந்தித்தனர்.

அங்கிருந்தவர்களில் முக்கியமான அறிவாளி சொன்னான்.

"நான் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறேன். மரத்தை வெட்ட முடியவில்லை என்றாலும் நாம் மரத்தின் கிளையை ஒடிப்போம். இப்போது இருப்பதில் நான் தானே பெரிய அறிவாளி. அதனால் நான் முதலில் மரத்தில் ஏறி உறுதியான ஒரு கிளையைப் பிடித்துத் தொங்குகிறேன். அப்போது உங்களில் ஒருவர் என் காலைப் பிடித்துத் தொங்க வேண்டும். அவருடைய காலைப் பிடித்து மற்றொருவர் தொங்க வேண்டும். அப்படி நீண்ட சங்கிலி போல ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கும் போது நம் பாரம் தாளாமல் கிளை ஒடிந்து கீழே விழும்!" என்றான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரை அழிக்க நினைப்பவன், தன்னைத் தானே அழித்துக்கொள்ள முயல்கிறான். இதுவே இயற்கையின் நியதி. – மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வினைத்திறன் இல்லாத பனை அபிவிருத்திச் சபை

பனை அபிவிருத்திச் சபையின் உருவாக்கம் பனை வளத்தைப் பாதுகாப்பதுடன் பனை சார் உற்பத்திகளை அதிகரித்து அதன்மூலம் ஏழை மக்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதாகும்.

இருந்தும் பனை அபிவிருத்திச் சபை என்பது ஆளுந்தரப்பு தனது அரசியல் பலத்தை உயர்த்தும் பொருட்டு தமக்குச் சார்பானவரைத் தலைவராக நியமிக்கின்ற அமைப்பாக மட்டுமே உள்ளது.

மற்றும்படி பனை அபிவிருத்திச் சபையால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

ஆம், ஒரு காலத்தில் ஒரு கிலோ சீனியின் விலையும் ஒரு கிலோ பனங்கட்டியின் விலையும் சமனாக இருந்தன.

ஆனால் இன்று ஒரு கிலோ சீனி 250 ரூபாயாக இருக்க, ஒரு கிலோ பனங்கட்டியின் விலை இரண்டாயிரம் ரூபாயாக உள்ளது.

இதேபோல பனங்கழியில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பனாட்டு மற்றும் ஒடியல் – புளுக்கொடியல் என்பனவற்றை முன்பு மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடிந்தது.

ஆனால் இப்போது அவற்றின் விலை மிக உச்சமாகிவிட்டது. உண்மை. ஒரு கிலோ பனாட்டு இரண்டாயிரம் ரூபாவுக்கு விற்பனையாகிறது எனில் யாரேனும் அவற்றை வாங்கி நுகர முடியுமா என்ன?

ஆக, பனை சார் உற்பத்திகள் கடுமையாகக் குறைந்துவிட்டன எனலாம்.

பனை தென்னை கூட்டுறவுச் சங்கங்கள் ஏதோ தம்மளவில் உற்பத்திகளில் ஈடுபட்டாலும் ஒரு கிலோ பனங்கட்டியை இரண்டாயிரம் ரூபாவுக்கு வாங்குகின்ற அளவில் நம்மவர்களின் பொருளாதாரம் போதுமானதாக இல்லை.

மாறாக, வெளிநாடுகளில் இருந்து தாயகத்துக்கு வருகின்ற நம் உறவுகள் பனங்கட்டியை – பனாட்டை – ஒடியல் மாவை – புளுக்கொடியலை வாங்கினால் மட்டுமே உண்டு.

மற்றும்படி உள்ளூரில் அவை மறந்த பண்டங்களாயின.

ஆக, பனை அபிவிருத்திச் சபையின் உருவாக்கத்துக்கு முன்னர், வீடுகள் தோறும் குடிசைக் கைத்தொழிலாகச் செய்யப்பட்ட பனை சார் உற்பத்திகள் அத்தனையும் தற்போது இல்லாது போயிற்று.

தவிர, பனை விதைகளை எடுத்து அவற்றை பாத்தியில் இட்டு பனங்கிழங்கை உற்பத்தி செய்வதிலும் எவருக்கும் நாட்டமில்லை.

இதனால் பனை விதைகள் கண்டபாட்டில் முளைத்து வடலிகள், பயிர்செய் நிலங்களையும் குடிமனைகளையும் ஆக்கிரமிக்கின்றன.

இதையும் கடந்து, முதிர் பனைகளைத் தறித்து அவற்றை வீடு கட்டுவதற்குப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இல்லாமல், பனை தறிப்பதாயின் அவை அனைத்துக்கும் ஒரே நிபந்தனையை விதித்துவிட, முதிர் பனைகள் பட்டுப் போய்விடுகின்றன.

இங்குதான் விற்க முடியாத பனைகளால் தமக்கு என்ன பயன் எனப் பொதுமக்கள் நினைக்க, பனை வளம் வீணே விடப்படலாயிற்று.

ஆக, ஒட்டு மொத்தத்தில் பனை அபிவிருத்திச் சபைக்கு பதிலாக வேறோர் ஏற்பாடு செய்தாக வேண்டும். இது காலத்தின் தேவை.

# அண்டை நாடுகளில் கொரோனா தொற்றுப்பரவல் தொடர்பில் விழிப்புடன் செயலாற்றுகிறோம்

## சுகாதார அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அண்டை நாடுகளில் கொரோனாத் தொற்றுப் பரவலானது மீண்டும் அதிகரித்துள்ள நிலையில் இது குறித்து இலங்கையின் சுகாதாரப் பிரிவு விழிப்புடன் செயலாற்றுவதாகவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (27) இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அமைச்சர் நளிந்த,

அண்டை நாடுகளில் மீண்டும் அதிகரித்துள்ள கொரோனாத் தொற்றுத் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ளோம். குறிப்பாக சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளில் கொரோனா தொற்றுவிபரண அறிக்கைகள் தொடர்பாக சுகாதாரப் பிரிவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. அரசாங்கம் விமான நிலையங்களில் தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு இது குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் எதிர்வரும் சில நாட்களில் உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளது. அத்துடன் சிக்குன் குனியா நோய் இன்னும் தொற்று பரவும் தன்மைக்கு வரவில்லை எனவும் தெரிவித்தார். (ம-4,7)

# முன்னாள் எம்.பிக்கள் 40 பேரை கைது செய்ய அரசாங்கம் முஸ்தீபு

## பதறுகிறார் விமல் வீரவன்ச

அரசாங்கம் 40 முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், ஜனாதிபதி செயலகம் கைது செய்யப்படவேண்டிய 40 அரசியல் வாதிகளின் பெயர் விபரங்களை இலஞ்ச ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளது.

அந்தப் பட்டியலில் எனது பெயர் உள்ளது. காஞ்சன விஜயசேகர, ரமேஸ் பத்திரன ஆகியோரின் பெயர்களும் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ள மகிந்தானந்த அளுத்கமகேயும் இவ்வாறே கைது செய்யப்பட்டார்.

முன்னைய அமைச்சர்களாக பதவி வகித்தவர்களின் அமைச்சுகளின் கீழ்வரும் திணைக்களங்களில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பிலேயே விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

ஆனால் அதற் காக எதற்கு முன்னாள் அமைச்சர்களை கைது செய்கின்றனர் எனத் தெரியவில்லை என்றார்.(ம-4,7)

# வவுனியாவில் களைகட்டவுள்ள நுங்குத் திருவிழாக் கொண்டாட்டம்

(வவுனியா)

நுங்கால் குளிரட்டும் கோடைகாலம் எனும் தொனிப்பொருளில் சுயாதீன தமிழ் இளைஞர்கள் ஏற்பாடு செய்துள்ள நுங்குத் திருவிழாவானது எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (1) காலை 10.30 மணியளவில் வவுனியாவிலுள்ள மருக்காரம்பளை மான் வளவில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பனைசார் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி, விற்பனை நாடகமும் ஆற்றுகையும் நுங்கு குடித்தலும்பனை உணவு பகிர்ந்துண்ணலும் பறை இசை, பாடலாடல்விளையாட்டு எனப் பல சுவாரசியமான நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. (ம-4,7)

# தவறான முடிவெடுத்து சிறுவன் உயிர்மாய்ப்பு

(அம்பலாங்கொடை)

அம்பலாங்கொடைப் பகுதியில் நேற்று 13 வயதுச் சிறுவன் ஒருவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

தரம் 7 இல் கல்வி பயிலும் குறித்த சிறுவன் நேற்று அதிகாலை தூக்கிட்ட நிலையில் அவரது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிறுவனின் மரணத்துக்கு மனவுளைச்சலே காரணம் என பெற்றோர் தெரிவித்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக இலங்கையில் அதிகளவு இளவயது தற்கொலை மரணங்கள் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

# கடற்படைக்கு எதிராக மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கிளி.மீனவரொருவர் முறைப்பாடு

கடற்படையினரால் தான் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியைச் சேர்ந்த மீனவரொருவர் இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

குறித்த மீனவர் கடந்த 21ம் திகதி கண்டாவளை பேப்பாறைப்பிட்டிக்கு கடற்தொழிலுக்காகச் சென்ற வேளையே கடற்படையைச் சேர்ந்த சிலரால் தாக்குதலுக்கு இலக்கியுள்ளார்.

இதுகுறித்து கிடைத்த தகவலுக்கமைய, சம்பவ இடத்துக்கு சென்ற தருமபுரம் பொலிஸார் குறித்த நபரை மீட்டு தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

பின்னர் அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கடற்படைக் கெதிரான முறைப்பாட்டைத் தருமபுரம் பொலிஸார் ஏற்க மறுத்தமையால் பாதிக்கப்பட்ட நபரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய காரியாலயத்தில் இது தொடர்பாக முறைப்பாடு அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-4,7)

# வெளிநாட்டுப் பயங்கரவாதத்துக்கு எதிராக புதிய சட்டமுறைமை

(கொழும்பு)

வெளிநாட்டு பயங்கரவாதத்துக்கு எதிராக செயற்படுவதற்காக வினைத்திறனான சட்ட ஒழுங்குமுறையை அறிமுகம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இச் சட்டமுறையை நடைமுறைப்படுத்த அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை முன்மொழிவின் 2178 (2014) அடிப்படையில் வெளிநாட்டு பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த குறித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய அபிவிருத்தியில் கற்றல் செயற்பாடுகளின் மேலான கல்வியியலாளர்களின் வகிபாகம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 2024-25 இற்கான வருடாந்த செயலமர்வு இன்றுடன் ஆரம்பித்து தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவிருக்கின்றது. இன்று காலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும் முதலாம் நாள் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையை பெருமகனார் மறைந்த பேராசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆக்கபூர்வமான சிந்தனைத் துளிகளை அள்ளியெடுத்து அவர் அதனை தற்கால நடைமுறைக்கு ஏற்றவாறு செயற்படுத்தியும் காட்டியவற்றை உதாரணமாக கொண்டும் எனது பல்கலைக்கழக வாழ்க்கை வரலாற்றையும் கலந்து "பிராந்திய அபிவிருத்தியில் கல்வியியலாளர்களின் கற்றல் செயற்பாடுகளையும் தாண்டிய வகிபாகம் [Academic Pursuit and Beyond: Engagement in Regional Development] என்னும் காத்திரமான தலைப்பில் உரையாற்றவிருக்கின்றேன்.

மறைந்த பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் (1932-2021) அவர்கள் உயிரி ரசாயனவியலில் பாண்டித்தியம் பெற்ற சிறந்த கற்பித்தல் வல்லாசானும், ஆய்வாளரும் ஆய்வு மாணவர்களின் சிறந்த வழிகாட்டியும் நிர்வாகத் துறையில் துறைத் தலைவராக மருத்துவபீட பீடாதிபதியாக சிறப்புற திகழ்ந்தவரும் தான் கொண்ட அறிவாற்றலை ஆய்வு முடிவுகளை தொழிற்றுறையாக மாற்றி பயோடெக் பிறைவேற் லிமிற்றட் இன் ஸ்தாபகருமானவர். ஆய்வின் முடிவுகள் பிராந்திய மக்களுக்கு தொழிற்றுறையை உருவாக்கி எமது பொருட்களை தரமானதாக பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கருப்பொருளை தமதாக்கி அதனை செய்தும் காட்டிய பெருமகனார்.

நீரிழிவு நோய்க்கு மருந்தாக பயன்பட்ட சிறுகுறுஞ்சா இலையை பவுடராக்கி அதனை பல நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்தவர். கல்வியிலாளர்கள் தொழிற்றுறை சார்ந்து தமது ஆய்வுகளையும் அதனை நிரூபிக்கும் வண்ணம் வடபிராந்தியத்தில் தாமே தொழிற்றுறையை ஆரம்பித்து அதனை செயற்படுத்தியும் காட்டியவர். தற்போது நம் நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழக- வர்த்தக தொடர்பாடலை உருவாக்குவதற்கு அடித்தளமும் இட்டவர் என்றால் மிகையாகாது.

பிராந்தியம் என இங்கே வரையறுக்கப்பட்டது மாகாணங்கள் எனக் கொள்ளுக. எமது நாட்டில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் (ஒன்றிரண்டை தவிர்த்து) ஆகக்குறைந்தது ஒரு பல்கலைக் கழகமாவது அமைந்திருக்கின்றது எனலாம். யாழ்ப்பாணம் கிளிநொச்சி ரஜரட்ட, பேராதனை, வயம்ப, களனி, கிழக்கு, தென்கிழக்கு, ஸ்ரீஜெயவர்த்தனபுர, கொழும்பு மொறட்டுவ மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் அமையப் பெற்றதனை ஆராய்ந்தால் பிராந்திய அபிவிருத்திக்காக பல பல்கலைக்கழகங்கள் அந்தந்த பிராந்தியங்களிலேயே அமைந்திருப்பதனை காணலாம்.

அரச திணைக்களங்கள் முழுமையாகவே தமது செயற்றிறனை கொண்டிருக்கின்றதோடு அரச நிதியை முழுமையாக கையாளும் வகையில் அவற்றுக்கான சட்ட திட்டங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மக்களின் வரிப்பணத்தின் முழுமையான பகிர்ந்தளிப்பாக ஒவ்வொரு வருடத்திலும் பிராந்திய அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடு இருக்கும். அதனால் வரி செலுத்துதல் என்பது அவசியமான செயற்பாடாக அமைகின்றதனை நாம் எல்லோரும் புரிந்து கொள்ளலாம். இடர்காலங்களில் இயற்கையாயினும் போராயினும் இழப்புகளுக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டதும் இந்தப் பணத்தில் தான். பன்னாட்டு தன்னார்வ நிறுவனங்களின் உதவியும் இதில் பெருமளவில் கிடைத்ததால் சுனாமி, வரட்சி மற்றும் போர்க்காலத்திலும் போர் ஓய்ந்தபின்னும் மேற்கூறிய பன்னாட்டு தன்னார்வ நிறுவனங்களின் உதவியும் கிடைக்கப்பெற்றதால் மக்கள் தமது வாழ்வாதாரத்தை ஓரளவிற்கு தக்கவைத்திருந்தாலும் பல குடும்பங்கள் தமது உறவுகளை இழந்து இன்னமும் தவித்துக் கொண்டிருப்பதனை அவதானிக்கலாம்.

**கற்பித்தலும் மதிப்பீடு செய்தலும் வழிநடத்தலும்**

பல்கலைக்கழகங்களில் கல்வியியலாளர்களின் முதன்மையான செயற்பாடாக கற்பித்தல் அமைகின்றது. கற்பித்தலென்பதில் அந்தந்த பட்டப்படிப்புக்களுக்கேற்ப வரையறுக்கப்பட்ட கல்விப்பரப்பை பல்வேறு வகையான கற்பித்தல் முறைகளை உள்வாங்கி மாணவர்களுக்கு விளங்கத்தக்க வகையில் கற்பிப்பதும் மாணவர்கள் அதனை எவ்வாறு கிரகித்துள்ளார்கள் என்பதனை பலதரப்பட்ட மதிப்பீட்டு பரீட்சைகளை வைத்து அவர்களின் திறனை மதிப்பீடும் செய்வார்கள். எழுத்து மூலமான பரீட்சைகளுடன் அவர்களின் பல்வேறு மென்திறன்களை வெளிப்படுத்தும் வகையிலான பரீட்சை முறைமைகளும் செயன்முறைகற்றலூடான புரிந்துணர்வினை மதிப்பீடு செய்வதும் இவற்றுள் அடங்கும். இதற்கும் மேலாக மாணவர்களை சுய கற்றலுக்கு (Independent Learning) தயார்படுத்தலும் அதன் மூலம் அவர்களின் அறிவுத்திறனை அதிகரிக்க செய்வதும் இன்னொரு செயற்பாடாக அமையும். இங்கே மாணவர்களது கற்றல் முறைமையை அவர்கள் எவ்வாறு கற்றிருக்கின்றார்கள் என்பதனை அறிய மாணவர்களிடம் கருத்துக்களை [Student Feedback] பெறுவதும் சக விரிவுரையாளர்களினால் மதிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையைப் (Peer observation) பெற்று இவ்விரண்டு செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்து கற்பித்தலில் ஈடுபடுபவர் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான கருத்துக்களை பெறும் செயன்முறை தரநிர்ணயஞ்செய்யும் குழுக்களினால் தரப்பட்ட பரிந்துரைகளுக்கமைவாக மேலதிகமான கற்றல் வடிவங்களை உட்புகுத்தி பலதரப்பட்ட மாணவர்களும் இலகுவில் புரிந்து கொள்ளுமளவுக்கு கற்பித்தல் திறன் அமைந்துவிடும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




**துவண்டு நலிந்து போன மக்களுக்கான வாழ்வியல்**

நீண்ட கால போரின் பின்னர் மீண்டெழ முயற்சிக்கும் வடபிராந்தியம் இன்னமும் பல தேவைகளை தினந்தினம் அல்லல்படும் மக்களை, வாழ்வாதாரத்தினை சவாலாக்கிய மக்களை, பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களை, வலிமையிழந்த குடும்ப உறுப்பினர்களை, ஒரு வேளை உணவுக்காக அல்லல்படும் உறவுகளை, குழந்தைகளை, பாதுகாப்பான வாழ்விடத்தைத் தேடும் மக்களை, முதியவர்களை பாதுகாக்கும் தேவையை, இப்படி பலவிதமான உறவுகளைக் கொண்டிருக்கும் போது அதற்கும் மேலாக க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம் கற்ற இளையவர்களை இங்கிருக்க முடியாதென புலம்பெயர்ந்த உறவுகளை பட்டதாரியாகியும் அதற்கேற்ற வேலையின்றி குறைந்த ஊதியத்தில் பணிபுரியும் இளையோரைக் கொண்டு உயிர்த்தெழ நினைக்கின்றது.

இதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்னும் கடுமையாக மேலதிகமாக தனது பங்களிப்பை காத்திரமானதாக கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பினும் இன்னமும் அதனை முழுமையாக செயற்படுத்தும் ஆளணியின் கொள்கைகள் திட்டங்கள் தீர்க்கமான முடிவுகள் என வரையறை செய்ய முடியாது தவித்துக் கொண்டிருக்கின்றது எனலாம். தனித்தனியான பங்களிப்புகள் பலவிருந்தாலும் அனைவரும் இணைந்து அரச இயந்திரத்துடனும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பிலும் ஆக்கபூர்வமான விடயங்களில் செயற்பட வேண்டும் என மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கிராம மற்றும் பிரதேச மட்டத்தில் இருக்கின்ற ஆளணியை வைத்து செயற்படுத்த நினைத்தாலும் காலத்துக்கேற்ற தனித்துவமான முழுமையான தீர்வாக அமையக்கூடிய விடயங்களுக்காவது முன்னுரிமையளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசியல்...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "வடக்கு மக்களின் சொந்தக் காணிகளை அவர்களுக்கு உரித்துடன் வழங்கவே அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆனால், வர்த்தமானி அறிவித்தலைத்தவறாகப் புரிந்துகொண்டுள்ள தமிழ் அரசியல்வாதிகள் சிலர், மக்களையும் தவறாக வழிநடத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்."

வடக்கு மக்களின் காணிகளை அபகரிக்கும் நோக்கம் அரசுக்குக் கிடையாது. கைவிடப்பட்டிருக்கும் அவர்களின் சொந்தக் காணிகளை அவர்களுக்குஉரித்துடன் வழங்கவே அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமையவே வர்த்தமானியை அரசு வெளியிட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை தவறாகப் புரிந்துகொண்டுள்ள தமிழ் அரசியல்வாதிகள் சிலர், மக்களையும் தவறாக வழிநடத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

தமிழ் மக்களின் சொந்தக் காணிகளை ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான அரசு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்று பொய்யான கோஷத்தை முன்வைத்து வடக்கு மக்களை வீதியில் களமிறக்கி அரசுக்கு எதிராகப் போராட வைக்கத் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் எத்தனிக்கின்றனர்.

எனவே, வடக்கு மக்கள் உண்மை நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும். போலி வேடம் போட்டு உங்களைத் தவறாக வழி நடத்தும் தமிழ் அரசியல்வாதிகளை நம்ப வேண்டாம் என்று வடக்கு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் என்றார். (ம-7,4)

## காணாமல்...

மன்னார் பிரதேசம் மடு கிராமத்தைச் சேர்ந்த எல்லப்பன் ராதாகிருஸ்னன் (வயது - 59) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் (26) வயலுக்குச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார்.

இதனையடுத்து உறவினர்கள் தேடிய நிலையில் வயலுக்குச் செல்லும் வீதியில் குறித்த குடும்பஸ்தர் சடலமாகக் காணப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார். (ம-7,4)

## தமிழர்கள்...

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்குமிடையில் நேற்று யாழ்ப்பாணத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பின்போதே மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

மேலும் இச்சந்திப்பில், ஆட்சி மாற்றத்தின் பின்னும் இந்த நாட்டில் திட்டமிட்ட வகையில் நடைபெற்று வரும் இன, மத ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக சர்வதேச அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டியுள்ளதன் அவசியம் உணர்ந்து, அவுஸ்திரேலிய அரசின் தீர்மானங்களும், இராஜதந்திர அழுத்தங்களும் ஈழத் தமிழர் நலன்சார்ந்து வலுப்பெற வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு தொடர்பான நிலப் பிரச்சினைகள், வடக்கு மாகாணத்தில் சுமார் 6000 ஏக்கர் கடலோர நிலங்களை அரசு நிலங்களாக அறிவிக்கும் சர்ச்சைக்குரிய வர்த்தமானி அறிவிப்பு குறித்தும், தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வாக வடக்கு மற்றும் கிழக்கில் நிலங்கள், பொலிஸ் மற்றும் நிதி ஆகியவற்றில் மீளமுடியாத அதிகாரங்களைக் கொண்ட சமஷ்டி அடிப்படையில் அரசியல் தீர்வு நிறுவப்பட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வலியுறுத்தினார்.

இந்தக்கூட்டத்தில் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ், அவரது துணைவியார் கிரிட்டினா ஸ்டீபன்ஸ், திட்ட ஒத்துழைப்புக்கான முதல் செயலாளர், திருமதி ஜோ கிட், அரசியல் துறைக்கான இரண்டாவது செயலாளர் மேத்யூ லார்ட் மற்றும் மூத்த ஆராய்ச்சி அதிகாரி சில்வெஸ்டர் வொர்திங்டன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7,4,33)

## வடக்கு முதல...

னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது இலங்கைத் தீவில் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நிறுத்தப்படுவார் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றால் அது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன? என்று கஜேந்திரகுமார் எம்.பியிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது,

"மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றால் நிச்சயம் நாங்கள் போட்டியிடுவோம். ஏனைய கட்சிகளின் முதலமைச்சர் வேட்பாளர்களின் பெயர்களைக் கருத்திற்கொண்டால் நாங்கள் ஒரு தும்புத்தடியை நிறுத்தலாம் என நினைக்கிறோம்" என்றார். (ம-7,4)

## பித்தப்பை...

நிரோஷா (வயது-37) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி பெண்ணிற்கு பித்தப்பையில் கல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 22ஆம் திகதி பித்தப்பையில் உள்ள கல்லை அகற்றுவதற்காக தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மயக்கமடைந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

உடற்கூற்று பாகங்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(ம-7,4,60,104)

## யாழில்...

உள்ளானது தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை 6 மாதங்களுக்கு புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-7,4,104)

## பனை...

டுள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக 2024.10.22 இல் நியமிக்கப்பட சகாதேவன் நேற்று அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசின் உட்கட்சி முரண்பாடு காரணமாகவே சகாதேவன் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.05.27
சீட்டிழுப்பு இலக்கம் 5842
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 6 6 6 9 8 8
அத சம்பத
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 6 9 8 8
சீட்டிழுப்பு இலக்கம் 417
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1872
I 04 19 45 77 I
Double Chance 81174

மெகா பவர்
திகதி 27/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2190
Y 02 11 30 49 76

ஜய JAYA
திகதி 2025.05.27
சீட்டிழுப்பு இலக்கம் 110
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 5 4 4 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4084
சீட்டிழுப்பு திகதி 27.05.2025
M 10 13 25 51
M

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.27
சீட்டிழுப்பு இலக்கம் 1151
சிம்மம் 05 25 27 40 சிம்மம்
39569 47

உத்தியோகபூர்வ முடிவுகள்
27.05.2025 வெற்றி வாரம் 550
ஆங்கில எழுத்து D 1 1 8 0 0 4
75080
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,000,000.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2816
சீட்டிழுப்பு திகதி 2025.05.27 தினம் செவ்வாய்க்கிழமை
04 43 55 79 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,463,938.40

சனிதா
திகதி 27.05.2025 வெற்றி வாரம் 4977
40 41 73 76 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,128,654.40
78248

சசிரி
வெற்றி வாரம் 691
சீட்டிழுப்பு திகதி 27.05.2025
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 34 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4528
சீட்டிழுப்பு திகதி 27.05.2025 தினம் செவ்வாய்க்கிழமை
05 16 29 58 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,632,257.60
130012

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 28 21 27 50 63
1992
27.05.2025

அத கோட்டிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2642
சீட்டிழுப்பு திகதி: 2025.05.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,799,490.40
10 20 31 34 N
642235

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தம்...

மிக்கவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (27) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய இந்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதே எமது எதிர்பார்ப்பாகும். தற்போதிருப்பது முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டம் அல்ல. சுமார் 38 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு அவற்றை உள்ளடக்கிய சட்ட மூலமே தற்போது காணப்படுகிறது.

அவற்றிலும் மேலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதற்காக போதுமானளவு கால அவகாசமும் அரசாங்கத்தால் வழங்கப்படும். திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளின் போது ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

நிகழ்நிலை பாவனையாளர்கள் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, திருத்தப்பட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் தேவை என்பதற்கு அப்பால், பொது மக்களின் தேவை என்பதே முக்கியத்துவமானது.

சமூக வலைத்தளங்களால் பாதிக்கப்படுவோர், தனிப்பட்ட நபர்கள் மீது அவதூறு பரப்புதல் என பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வாக நிகழ்நிலை காப்பு சட்டம் அமையும் என்றார்.

அமைச்சரவையால் கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி 2024ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்த ஒருங்கிணைந்த அமைச்சரவை குறிப்பு; கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய தற்போது இனங்காணப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களை ஆராய்ந்த பின்னர் இனங்காணப்படும் திருத்தங்களை உள்ளடக்கி மேற்குறித்த சட்டத்தை திருத்தம் செய்வதற்கான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் தொடர்புடைய அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. (ம-4,7)

## வடக்கு பிரதம செயலாளர் ஆளுநருடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களை, வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட திருமதி தனுஜா முருகேசன் அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (27) மரியாதை நிமித்தமாக ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளராக கடந்த செவ்வாய்க்கிழமை (20.05.2025) ஜனாதிபதியின் செயலாளரிடமிருந்து நியமனம் பெற்ற திருமதி தனுஜா முருகேசன், கைதடியிலுள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப் பேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

## வடக்கில்...

வட மாகாணத்தில் காணித் தீர்வு தொடர்பாக 2025, மார்ச் 28 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானியை அரசாங்கம் திரும்பப் பெற்றுள்ளது.

முன்னதாக, வட மாகாணத்தில் உள்ள பல கிராமங்களில் 5,940 ஏக்கர் காணிகளை கையகப்படுத்துவது தொடர்பாக விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சகத்தின் கீழ் உள்ள காணி உரிமை தீர்வுத் திணைக்களத்தால், வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

எனினும் அரசாங்கம் வடக்கில் மக்களின் காணிகளை, கையகப்படுத்த முயற்சிப்பதாகக் கூறி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் வடக்கின் அரசியல்வாதிகளும் இந்த வர்த்தமானிக்கு தங்கள் எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர்.

கடந்த பாராளுமன்ற அமர்வொன்றின் போது, பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனிநபர் பிரேரணை ஒன்றினை முன்வைத்து இது குறித்து உரையாற்றியிருந்தார்.

இதனையடுத்து பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சர் லால் காந்த உள்ளிட்டோர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு, அந்த வர்த்தமானியை மீளப்பெறுமாறு கடும் அழுத்தம் கொடுத்ததோடு விமர்சனங்களையும் முன்வைத்திருந்தனர்.

இந்த அழுத்தங்களின் பின்னரே குறித்த வர்த்தமானி மீளப் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் இது தொடர்பில் காணி உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்கும் வகையிலான கூட்டம் ஒன்றும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்


ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3061)

076 825 7716 (ஆகாஸ்)

காணவில்லை



நெல்லியடியை வசிப்பிடமாகவும் நெல்லியடி லொத்தர் விற்பனை முகவருமாகிய திரு.V.பாலசுப்பிரமணியம் என்பவர் ஞாபக மறதி காரணமாக பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி வருவதாகக் கூறியவர் இதுவரை வீடு வரவில்லை. தகவல் அறிந்தவர்கள் மகன் சிந்துவிற்கு தெரியப்படுத்தவும். (C-3063)

தொடர்பு இலக்கம் : 077 332 8132

வீடு வாடகைக்கு உண்டு

கல்வியங்காடு சந்திக்கு அருகில் Main Road இல் 2 அறை, 1 Hall, 1 office Room நிறுவனங்கள், களஞ்சியங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :

077 627 3493 (4389)

மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம், கிரகபாவம் 22, செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு : (1174)

077 864 9878, 077 634 3103

ஆங்கிலம் 4 திறன் கற்றல்

ஆங்கிலப் பேச்சு மற்றும் பரீட்சை நோக்கிய கல்வி



28 மாகாண விருதுகள்
4 பொன் விருதுகள்
மூன்று தடவை தேசியம் சென்றமை

S.Gnanagaran

Spl trained, HNDE, BED (Eng), MA(Eng) UG

பழைய மாணவன் யாழ். இந்து, ஆங்கில ஆசிரியர், அகில இலங்கை சமாதான நீதவான்(JP)

Online(Zoom) மற்றும் நேரடி பயிற்சி வகுப்புகள் (4399)

077 611 4068

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 27 பரப்பு காணி விற்பனைக்கு 18 அடி பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்

- பலாலி வீதி, ஊரெழுப் பிள்ளையார் கோவில் முன் வீதி 150m தூரத்தில்
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், செம்மண் காணி
- குடியிருப்புகள் சூழவுள்ள காணி
- ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே
- பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் 6 மணி வரை

தொடர்புகளுக்கு : (4401)

076 739 0413, 077 623 4204

கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3062)

இன்றே உங்கள் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்திக் கொள்ளுங்கள்

தரம் 1 முதல் 5 வரை புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தல் வகுப்பு

> அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படும்
> குழுவாக இணைந்து கற்பித்தல் (Group Clz)
> தனிப்பட்ட முறையில் கற்பித்தல் (Personal Clz)
> நிகழ்நிலை முறை (Zoom online Clz)

சுன்னாகம், மாதியப்பிட்டி, தெல்லிப்பளை, உடுவில், மல்லாகம்

L.கம்ஷி
B.A (Honours) planning
076 460 5484 (1175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.